க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை

# மதிப்பீட்டு அறிக்கை
# 2019

## 22
## தமிழ் மொழி

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் (பாடசாலைப் பரீட்சை) கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2019

# மதிப்பீட்டு அறிக்கை

## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

**ஆய்வு அபிவிருத்திக் கிளை**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

**முழுப் பதிப்புரிமையுடையது.**
**க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2019**
**மதிப்பீட்டு அறிக்கை - தமிழ்மொழியும் இலக்கியமும்**

## பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் அதிக பரீட்சார்த்திகள் வருடாந்தம் தோற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.தர)ப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு இம் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இம் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதன் பிரதான நோக்கங்கள் மாணவர் அடைவு தொடர்பிலான முழுமையான பகுப்பாய்வொன்றினை முன்வைத்தல், அவர்களின் பலம், பலவீனம் காணப்படும் துறைகளை இனங்காணல், நாடுபூராகவும் ஒட்டுமொத்த கல்வி முறைமையை முன்னேற்றுவதற்கான வழிகாட்டலை வழங்குதல் என்பன ஆகும்.

கல்விப் பொதுத் தாரதரப் பரீட்சையில் மாணவர்களின் திறனை பாட மட்டத்தில் அறிந்து கொள்வதற்கு கல்விப் புலத்தைச் சார்ந்த அனைத்துத் தரப்பினருக்கும் இவ் அறிக்கை சிறந்த கருவியாகும். ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு திறன்கள் மற்றும் தேர்ச்சிகள் ஊடக மாணவர் அடைவு தொடர்பான விவரணமான விளக்கம் இதனூடாக வழங்கப்படும் அதேவேளை, அது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் விசேட உதவிகள் தேவைப்படும் துறைகள் தொடர்பில் கவனஞ்செலுத்துவதற்கும் வழிகாட்டுகின்றது. இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகள் மற்றும் பகுப்பாய்வு என்பன கலைத்திட்டத்தைத் திட்டமிடுதல், வளங்களை ஒதுக்குதல் ஆசிரிய பயிற்சி செயற்றிட்டங்கள் தொடர்பான சரியான தீர்மானங்களை மேற்கொள்தல் என்பவற்றுக்கு கலைத்திட்ட அபிவிருத்தியாளர்களுக்கும் கல்விக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் துணைபுரிவதுடன், மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பரீட்சையின் கட்டமைப்பு, எதிர்பார்க்கப்படும் இலக்குகள் என்பன தொடர்பான தெளிவையும் பெற்றுத்தருகின்றது.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் உச்ச பயனைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து பயனாளர்களும் பரீட்சார்த்திகளின் அடைவு தொடர்டபான தரவுகளை ஆயத்தமாக கற்றுணர வேண்டிய அதேவேளை ஒவ்வொரு வினா உருப்படி தொடர்பிலும் விசேட கவனஞ்செலுத்தி, அதனோடு முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களையும் ஆலோசனைகளையும் கவனமாக ஆராய்தல் வேண்டும். இந்த அறிவு தரவுகளை சரியாக விளங்கிக் கொள்வதற்குத் தேவையான பின்புலத்தை வழங்கும். மாணவர்கள், ஆசிரியர்கள் கல்வியயலாளர்கள், கொள்கைவகுப்பாளர்கள் என ஒவ்வொருவருக்கும் உரிய பணிகளின் ஊடாக உத்தேச அபிவிருத்தியை முன்னொடுத்துக் கற்றல் - கற்பித்தல் அல்லது கொள்கை வகுக்கும் செயற்பாடுகளுக்குரிய ஆலோசனைகளை ஒன்றிணைத்தலுக்கு இதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிவினைப் பயன்படுத்த வேண்டும் என அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எதிர்வரும் காலங்களில் முன்னேற்றப் போக்கை அளவிடுவதற்கு இவ் அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளமுடியும்.

இந்த அறிக்கையின் உண்மைப் பெறுமதியானது எமது கல்வி முறைமையை விருத்தி செய்வதற்கு இத் தகவல்களைப் பயன்படுத்தும் முறையில் தங்கியுள்ளது. எனவே கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர தரப் பரீட்சையின் அனைத்துத் தரப்பினரையும் இந்த தரவுப் பகுப்பாய்வு என்பன மூலம் கருத்துள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும், உத்தேச அபிவிருத்தி செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றாகச் செயற்படுவதற்கும் அழைப்பு விடுகின்றேன்.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | காயத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு அபிவிருத்திக் கிளை |
| இணைப்பாளர் | - | டபிள்யூ. வி. டி. எஸ். எம். வறகாகொட<br>பிரதிப் பரீட்சை பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு அபிவிருத்திக் கிளை |
| பாட இணைப்பாளர் | - | கிரித்திக்கா பகிரதன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திருமதி. நஞ்சனி வெலிசறகே<br>ஓய்வுபெற்ற ஆசிரியை<br><br>திருமதி. கெங்கா பாலதயாளன்<br>ஆசிரியை<br>சென். தோமஸ் கல்லூரி (கல்கிசை)<br><br>திருமதி. லலித்தா ரட்ணஜோதி<br>ஆசிரியை<br>கொ /இந்துக்கல்லூரி (கொழும்பு - 04) |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | சிவலிங்கம் குகனேஸ்வரன்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | - | ஏ. எல். கே. சதுராணி<br>முகாமைத்துவ சேவை அலுவலர் |

## அறிக்கை சாராம்சம்

இம் மதிப்பீட்டு அறிக்கையானது தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் I, II, III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடை அளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தரம் 10, 11 ஆசிரியர் வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை நடைமுறையில் சாத்தியமாகும் வண்ணம் ஒழுங்கமைக்கக்கூடிய வழிகாட்டற் குறிப்புகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் வினாப்பத்திரம் I, மாணவர்களின் மொழிவள ஆற்றல், இலக்கண அறிவு, தகவல் தொடர்பாடல் சார்ந்த கலைச்சொற்கள், பல்வேறு துறைசார்ந்த விசேட சொற்பதங்கள், வாக்கியங்களின் கருத்துத் தொடர்பில் ஒழுங்குபடுத்தி பந்தியாக்கம் செய்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. இவ்வினாப்பத்திரத்தில் மாணவர்களின் இலக்கணப் பயன்பாட்டுத்திறனுக்கான அடைவு மட்டம் திருப்திகரமாகக் காணப்படவில்லை.

வினாப்பத்திரம் II இல் இலக்கண அறிவு, மொழிப்பிரயோகம், கட்டுரையாக்கம், சுருக்கம், சந்தி பிரித்து எழுதுதல், இலக்கண அறிவு (எழுவாய், பயனிலைகளை இனங்காணல்), வாக்கிய அமைப்புகள், மொழியறிவு, ஆகிய பகுதிகளில் போதிய அடைவு மட்டத்தை மாணவர்கள் அடையவில்லை

வினாப்பத்திரம் III இற்குரிய வினாக்கள் பாடநூலில் இடம்பெறும் இலக்கியப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே வினவப்படுகின்றன. இப்பகுதியில் வருகின்ற செய்யுட் பகுதிகள், புதுக்கவிதைகள், உரைநடைப்பகுதிகளில் இடம்பெறும் கதாபாத்திரங்கள், சம்பவங்கள், அணிப்பிரயோகங்கள், படைப்பாசிரியரின் நோக்கம் ஆகியன தேர்ச்சிகளுக்கான மாணவர்களின் அடைவுமட்டம் திருப்திகரமாகக் காணப்படவில்லை.

# உள்ளடக்கம்

**பாகம் I**

பக்க எண்

**1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**
**1.1 பாடக் குறிக்கோள்கள்** 1
**1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**
1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 2
1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்டங்களின் அடிப்படையில் 3
1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில் 4
1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 7

**பாகம் II**

**2.0 வினா உருப்படிகள், அவற்றின் விடைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வு**
**2.1 வினாப்பத்திரம் I இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்** 9
2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9
2.1.2 வினாப்பத்திரம் I 9
2.1.3 வினாப்பத்திரம் I இன் புள்ளி வழங்கும் திட்டம் 13
2.1.4 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்ட அடைவு 14
2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் (சதவீதத்தில்) 15
2.1.6 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வு
2.1.6.1 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 16
2.1.6.2 பாடத் தொனிப்பொருள் அடிப்படையிலான பகுப்பாய்வு 17
2.1.6.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 20
2.1.6.4 வினாப்பத்திரம் I இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 22
**2.2 வினாப்பத்திரம் II இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**
2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 23
2.2.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 23
2.2.3 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 24
2.2.4 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 25
2.2.5 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வு
2.2.5.1 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 26
2.2.5.2 வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாக்களும், விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்பும் ஆலோசனைகளும் 27
2.2.5.3 வினாப்பத்திரம் II இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 42
**2.3 வினாப்பத்திரம் III இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**
2.3.1 வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு 43
2.3.2 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 44
2.3.3 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு 44
2.3.4 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 45
2.3.5 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வு
2.3.5.1 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 46
2.3.5.2 வினாப்பத்திரம் III இன் ஒவ்வொரு வினாக்களும், விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்பும் ஆலோசனைகளும் 47
2.3.5.3 வினாப்பத்திரம் III இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 65

**வரைபுகளின் பட்டியல்**


| | பக்க எண் |
|---|---|
| 1. வரைபு 1 : வினாப்பத்திரம் I இல் பெறப்பட்ட அடைவு | 14 |
| 2. வரைபு 2 : தொனிப்பொருளுக்கேற்ப வினாக்களுக்கான இலகுதன்மை | 17 |
| 3. வரைபு 3 : தொனிப்பொருளுக்கேற்பப வினாக்களின் சராசரி இலகுதன்மை | 18 |
| 4. வரைபு 4 : வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் | 23 |
| 5. வரைபு 5 : வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு | 24 |
| 6. வரைபு 6 : வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் (புள்ளிகளின் வீச்சு) | 25 |
| 7. வரைபு 7 : வினாப்பத்திரம் II இன் 1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 28 |
| 8. வரைபு 8 : வினாப்பத்திரம் II இன் 1ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை | 28 |
| 9. வரைபு 9 : வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 32 |
| 10. வரைபு 10 : வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை | 32 |
| 11. வரைபு 11 : வினாப்பத்திரம் II 3ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 35 |
| 12. வரைபு 12 : வினாப்பத்திரம் II இன் 3ஆம் வினாவின் இலகுதன்மை | 35 |
| 13. வரைபு 13 : வினாப்பத்திரம் II இன் 4ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 37 |
| 14. வரைபு 14 : வினாப்பத்திரம் II இன் 4ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை | 37 |
| 15. வரைபு 15 : வினாப்பத்திரம் II இன் 5ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 40 |
| 16. வரைபு 16 : வினாப்பத்திரம் II இன் 5ஆம் வினாவின் தெரிவுகளுக்கான இலகுதன்மை | 40 |
| 17. வரைபு 17 : வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் | 43 |
| 18. வரைபு 18 : வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு | 44 |
| 19. வரைபு 19 : வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் (புள்ளிகளின் வீச்சுக்கேற்ப) | 45 |
| 20. வரைபு 20 : வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 49 |
| 21. வரைபு 21 : வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவின் பிரிவுகள், உபபிரிவுகளுக்கான இலகுதன்மை | 49 |
| 22. வரைபு 22 : வினாப்பத்திரம் III இன் 2ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 52 |
| 23. வரைபு 23 : வினாப்பத்திரம் III இன் 2ஆம் வினாவின் பிரிவுகள், உபபிரிவுகளுக்கான இலகுதன்மை | 52 |
| 24. வரைபு 24 : வினாப்பத்திரம் III இன் 3ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 55 |
| 25. வரைபு 25 : வினாப்பத்திரம் III இன் 3ஆம் வினாவின் பிரிவுகள், உபபிரிவுகளுக்கான இலகுதன்மை | 55 |
| 26. வரைபு 26 : வினாப்பத்திரம் III இன் 4ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 58 |
| 27. வரைபு 27 : வினாப்பத்திரம் III இன் 4ஆம் வினாவின் பிரிவுகள், உபபிரிவுகளுக்கான இலகுதன்மை | 59 |
| 28. வரைபு 28 : வினாப்பத்திரம் III இல் 5ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 60 |
| 29. வரைபு 29 : வினாப்பத்திரம் III இன் 5ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை | 61 |
| 30. வரைபு 30 : வினாப்பத்திரம் III இல் 6ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 62 |
| 31. வரைபு 31 : வினாப்பத்திரம் III இன் 6ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை | 62 |
| 32. வரைபு 32 : வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 64 |
| 33. வரைபு 33 : வினாப்பத்திரம் II இன் 7ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை | 64 |

**அட்டவணைகளின் பட்டியல்**

**பக்க எண்**

1. அட்டவணை 1 : தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 02
2. அட்டவணை 2 : பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 02
3. அட்டவணை 3 : முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்ட அடிப்படையில் 03
4. அட்டவணை 4 : முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில் 04
5. அட்டவணை 5 : வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 07
6. அட்டவணை 6 : வினாத்தாள் I இன் தெரிவுகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்) 15
7. அட்டவணை 7 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் இலகுதன்மைகூடிய வினாக்களும் இலகுதன்மை குறைந்த வினாக்களும் 18
8. அட்டவணை 8 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் 40% விட குறைவான இலகுதன்மைகொண்ட வினாக்கள் 19

# பாகம் I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- பரீட்சை நோக்கில் மட்டுமன்றி, பெற்ற மொழியறிவினை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கையாளும் திறனை வளர்த்தல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார, பண்பாட்டு, பாரம்பரிய விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், விஞ்ஞானம், தகவல் தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து, ஆக்கங்களைப் படைக்கவும் மொழியைச் சிறப்பாகக் கையாளவும் முழு ஆற்றலைப் பெறுதல்.
- தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் பிறரிடம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உணர்ச்சிகளை வெளியிடவும் மொழியைக் கையாளும் திறனைப் பெற்றிருத்தல்
- மாணவரின் ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்களை விருத்தி செய்வதோடு, சிந்தனைத் திறனையும் மேம்படுத்தல்
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கையாள்தல்

மூலம் : தமிழ்மொழியும் இலக்கியமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் - 10 (2015). தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 69,743 | 32,984 | 47.29 | 36,759 | 52.71 | 12,783 | 7,861 | 61.5 | 4,922 | 38.5 | 82,526 | 40,845 | 49.49 | 41,681 | 50.51 |

**அட்டவணை 1**

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை 2019 இல் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கு 82,526 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர். இவர்களில் 69,743 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 12,783 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குவர். பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 47.29% ஆனோர் ஆண் பரீட்சார்த்திகளாக இருப்பினும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் இது 61.5% என்ற உயர் பெறுமானத்தைப் பெறுகின்றது. பெண் பரீட்சார்த்திகளில் அதிகமானோர் (52.71%) பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவே தோற்றியுள்ளனர்.

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | | ஆண் | | பெண் | | | |
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| A | 1,652 | 5.01 | 4,585 | 12.47 | 31 | 0.39 | 45 | 0.91 | 6,313 | 7.65 |
| B | 3,704 | 11.23 | 7,240 | 19.70 | 133 | 1.69 | 277 | 5.63 | 11,354 | 13.76 |
| C | 10,202 | 30.93 | 13,947 | 37.94 | 1,255 | 15.96 | 1,523 | 30.94 | 26,927 | 32.63 |
| S | 10,712 | 32.48 | 8,422 | 22.91 | 3,214 | 40.89 | 2,149 | 43.66 | 24,497 | 29.68 |
| W | 6,714 | 20.36 | 2,565 | 6.98 | 3,228 | 41.06 | 928 | 18.85 | 13.435 | 16.28 |
| மொத்தம் | **32,984** | **100.00** | **36,759** | **100.00** | **7,861** | **100.00** | **4,922** | **100.00** | **82,526** | **100.00** |

**அட்டவணை 2**

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் ஒப்பீட்டளவில் பெண் பரீட்சார்த்திகள் ஆண் பரீட்சார்த்திகளைக் காட்டிலும் உயர் சித்தியைப் பெற்றுள்ளனர். அதிவிசேட சித்தி (A), விசேட திறமைச் சித்தி (B), திறமைச் சித்தி (C) ஆகிய தரங்களை ஆண் பரீட்சார்த்திகளைவிடப் பெண் பரீட்சார்த்திகளே அதிகளவில் பெற்றுள்ளனர். தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றிய பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாக அமைந்துள்ளபோதிலும் ஒப்பீட்டளவில் அவர்களும் உயர் சித்திகளையே பெற்றுள்ளனர். சாதாரண சித்தி (S) பெற்றோர், சித்தியடையாதோர் (W) சதவீதங்களில் ஆண் பரீட்சார்த்திகள் முன்னிலையில் காணப்படுகின்றனர்.

இந்த வகையில் எமது வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகள் ஆண் பிள்ளைகளின் அடைவை அதிகரிக்கச் செய்யும் வகையில் அமைய வேண்டியது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

### 1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள்: மாவட்டங்கள் அடிப்படையில்

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | அதிவிசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3,168 | 455 | 14.36 | 511 | 16.13 | 1,074 | 33.90 | 783 | 24.72 | 2,823 | 89.11 | 345 | 10.89 |
| 2. கம்பஹா | 1,274 | 105 | 8.24 | 187 | 14.68 | 439 | 34.46 | 355 | 27.86 | 1,086 | 85.24 | 188 | 14.76 |
| 3. களுத்துறை | 1,880 | 157 | 8.35 | 258 | 13.72 | 582 | 30.96 | 500 | 26.60 | 1,497 | 79.63 | 383 | 20.37 |
| 4. கண்டி | 4,768 | 339 | 7.11 | 673 | 14.11 | 1,571 | 32.95 | 1,392 | 29.19 | 3.975 | 83.37 | 793 | 16.63 |
| 5. மாத்தளை | 1,431 | 122 | 8.53 | 233 | 16.28 | 457 | 31.94 | 400 | 27.95 | 1,212 | 84.70 | 219 | 15.30 |
| 6. நுவரெலியா | 6,441 | 407 | 6.32 | 817 | 12.68 | 2,514 | 39.03 | 2,014 | 31.27 | 5,752 | 89.30 | 689 | 10.70 |
| 7. காலி | 317 | 31 | 9.78 | 57 | 17.98 | 92 | 29.02 | 76 | 23.97 | 256 | 80.76 | 61 | 19.24 |
| 8. மாத்தறை | 465 | 23 | 4.95 | 77 | 16.56 | 187 | 40.22 | 123 | 26.45 | 410 | 88.17 | 55 | 11.83 |
| 9. அம்பாந்தோட்டை | 161 | 6 | 3.73 | 10 | 6.21 | 51 | 31.68 | 40 | 24.84 | 107 | 66.46 | 54 | 33.54 |
| 10. யாழ்ப்பாணம் | 8,518 | 916 | 10.75 | 1,538 | 18.06 | 2,985 | 35.04 | 2,008 | 23.57 | 7,447 | 87.43 | 1,071 | 12.57 |
| 11. கிளிநொச்சி | 1,614 | 155 | 9.60 | 311 | 19.27 | 697 | 43.18 | 374 | 23.17 | 1,537 | 95.23 | 77 | 4.77 |
| 12. மன்னார் | 2,249 | 244 | 10.85 | 406 | 18.05 | 847 | 37.66 | 542 | 24.10 | 2,039 | 90.66 | 210 | 9.34 |
| 13. வவுனியா | 1,567 | 153 | 9.76 | 287 | 18.32 | 568 | 36.25 | 390 | 24.89 | 1,398 | 89.22 | 169 | 10.78 |
| 14. முல்லைத்தீவு | 2,254 | 190 | 8.43 | 350 | 15.53 | 756 | 33.54 | 611 | 27.11 | 1,907 | 84.61 | 347 | 15.39 |
| 15. மட்டக்களப்பு | 8,042 | 847 | 10.53 | 1,343 | 16.70 | 2,671 | 33.21 | 2,061 | 25.63 | 6,922 | 86.07 | 1120 | 13.93 |
| 16. அம்பாறை | 6,001 | 700 | 11.66 | 1,147 | 19.11 | 2,190 | 36.49 | 1,443 | 24.05 | 5,480 | 91.32 | 521 | 8.68 |
| 17. திருகோணமலை | 4,194 | 373 | 8.89 | 670 | 15.98 | 1,422 | 33.91 | 1,087 | 25.92 | 3,552 | 84.69 | 642 | 15.31 |
| 18. குருநாகல் | 2093 | 173 | 8.27 | 374 | 17.87 | 682 | 32.58 | 561 | 26.80 | 1,790 | 85.52 | 303 | 14.48 |
| 19. புத்தளம் | 2,214 | 265 | 11.97 | 405 | 18.29 | 709 | 32.02 | 547 | 24.71 | 1,926 | 86.99 | 288 | 13.01 |
| 20. அனுராதபுரம் | 1,083 | 80 | 7.39 | 162 | 14.96 | 378 | 34.90 | 287 | 26.50 | 907 | 83.75 | 176 | 16.25 |
| 21. பொலன்னறுவை | 492 | 30 | 6.10 | 78 | 15.85 | 185 | 37.60 | 134 | 27.24 | 427 | 86.79 | 65 | 13.21 |
| 22. பதுளை | 3,189 | 176 | 5.52 | 453 | 14.21 | 1,164 | 36.50 | 999 | 31.33 | 2,792 | 87.55 | 397 | 12.45 |
| 23. மொனராகலை | 243 | 18 | 7.41 | 47 | 19.34 | 77 | 31.69 | 66 | 27.16 | 208 | 85.60 | 35 | 14.40 |
| 24. இரத்தினபுரி | 1,423 | 77 | 5.41 | 180 | 12.65 | 544 | 38.23 | 413 | 29.02 | 1,214 | 85.31 | 209 | 14.69 |
| 25. கேகாலை | 1,902 | 186 | 9.78 | 325 | 17.09 | 686 | 36.07 | 447 | 23.50 | 1,644 | 86.44 | 258 | 13.56 |
| **மொத்தம்** | **66,983** | **6,228** | **9.30** | **10,899** | **16.27** | **23,528** | **35.13** | **17,653** | **26.35** | **58,308** | **87.05** | **8,675** | **12.95** |

**அட்டவணை 3**

## 1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில்

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | அதிவிசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2,834 | 430 | 15.17 | 466 | 16.44 | 955 | 33.70 | 690 | 24.35 | 2,541 | 89.66 | 293 | 10.34 |
| 2. ஹோமாகம | 133 | 5 | 3.76 | 13 | 9.77 | 47 | 35.34 | 43 | 32.33 | 108 | 81.20 | 25 | 18.80 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 29 | 0 | 0.00 | 7 | 24.14 | 10 | 34.48 | 10 | 34.48 | 27 | 93.10 | 2 | 6.90 |
| 4. பிலியந்தல | 172 | 20 | 11.63 | 25 | 14.53 | 62 | 36.05 | 40 | 23.26 | 147 | 85.47 | 25 | 14.53 |
| 5. கம்பஹா | 348 | 25 | 7.18 | 48 | 13.79 | 103 | 29.60 | 97 | 27.87 | 273 | 78.45 | 75 | 21.55 |
| 6 மினுவாங்கொட | 246 | 17 | 6.91 | 44 | 17.89 | 101 | 41.06 | 60 | 24.39 | 222 | 90.24 | 24 | 9.76 |
| 7. நீர்கொழும்பு | 291 | 35 | 12.03 | 48 | 16.49 | 89 | 30.58 | 78 | 26.80 | 250 | 85.91 | 41 | 14.09 |
| 8. களனி | 389 | 28 | 7.20 | 47 | 12.08 | 146 | 37.53 | 120 | 30.85 | 341 | 87.66 | 48 | 12.34 |
| 9. களுத்துறை | 1,319 | 128 | 9.70 | 180 | 13.65 | 413 | 31.31 | 349 | 26.46 | 1,070 | 81.12 | 249 | 18.88 |
| 10. மத்துகம | 193 | 9 | 4.66 | 25 | 12.95 | 67 | 34.72 | 56 | 29.02 | 157 | 81.35 | 36 | 18.65 |
| 11. ஹொரணை | 368 | 20 | 5.43 | 53 | 14.40 | 102 | 27.72 | 95 | 25.82 | 270 | 73.37 | 98 | 26.63 |
| 12. கண்டி | 1,027 | 142 | 13.83 | 185 | 18.01 | 331 | 32.23 | 262 | 25.51 | 920 | 89.58 | 107 | 10.42 |
| 13. தேனுவர | 563 | 46 | 8.17 | 105 | 18.65 | 180 | 31.97 | 154 | 27.35 | 485 | 86.15 | 78 | 13.85 |
| 14. கம்பளை | 1,226 | 69 | 5.63 | 155 | 12.64 | 423 | 34.50 | 400 | 32.63 | 1,047 | 85.40 | 179 | 14.60 |
| 15. தெல்தெனியா | 219 | 2 | 0.91 | 28 | 12.79 | 78 | 35.62 | 77 | 35.16 | 185 | 84.47 | 34 | 15.53 |
| 16. வத்தேகம | 842 | 19 | 2.26 | 73 | 8.67 | 288 | 34.20 | 255 | 30.29 | 635 | 75.42 | 207 | 24.58 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 891 | 61 | 6.85 | 127 | 14.25 | 271 | 30.42 | 244 | 27.38 | 703 | 78.90 | 188 | 21.10 |
| 18. மாத்தளை | 1,166 | 105 | 9.01 | 181 | 15.52 | 368 | 31.56 | 328 | 28.13 | 982 | 84.22 | 184 | 15.78 |
| 19. கலேவெல | 214 | 15 | 7.01 | 43 | 20.09 | 74 | 34.58 | 55 | 25.70 | 187 | 87.38 | 27 | 12.62 |
| 20. நாஉல | 51 | 2 | 3.92 | 9 | 17.65 | 15 | 29.41 | 17 | 33.33 | 43 | 84.31 | 8 | 15.69 |
| 21. வில்கமுவ | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 22. நுவரெலியா | 2,658 | 93 | 3.50 | 274 | 10.31 | 1,022 | 38.45 | 934 | 35.14 | 2,323 | 87.40 | 335 | 12.60 |
| 23. கொத்மலை | 609 | 45 | 7.39 | 74 | 12.15 | 242 | 39.74 | 189 | 31.03 | 550 | 90.31 | 59 | 9.69 |
| 24. ஹட்டன் | 2,432 | 194 | 7.98 | 343 | 14.10 | 938 | 38.57 | 732 | 30.10 | 2,207 | 90.75 | 225 | 9.25 |
| 25. வலப்பனை | 570 | 69 | 12.11 | 116 | 20.35 | 251 | 44.04 | 107 | 18.77 | 543 | 95.26 | 27 | 4.74 |
| 26. ஹங்குரன்கெத்த | 172 | 6 | 3.49 | 10 | 5.81 | 61 | 35.47 | 52 | 30.23 | 129 | 75.00 | 43 | 25.00 |
| 27. காலி | 247 | 24 | 9.72 | 45 | 18.22 | 72 | 29.15 | 55 | 22.27 | 196 | 79.35 | 51 | 20.65 |
| 28. எல்பிட்டிய | 39 | 6 | 15.38 | 9 | 23.08 | 9 | 23.08 | 11 | 28.21 | 35 | 89.74 | 4 | 10.26 |
| 29. அம்பலாங்கொடை | 14 | 1 | 7.14 | 2 | 14.29 | 5 | 35.71 | 4 | 28.57 | 12 | 85.71 | 2 | 14.29 |
| 30. உடுகம | 17 | 0 | 0.00 | 1 | 5.88 | 6 | 35.29 | 6 | 35.29 | 13 | 76.47 | 4 | 23.53 |
| 31. மாத்தறை | 192 | 14 | 7.29 | 40 | 20.83 | 91 | 47.40 | 32 | 16.67 | 177 | 92.19 | 15 | 7.81 |
| 32. அக்குரஸ்ஸ | 125 | 7 | 5.60 | 24 | 19.20 | 56 | 44.80 | 34 | 27.20 | 121 | 96.80 | 4 | 3.20 |
| 33. முலடியன-ஹக்மன | 16 | 0 | 0.00 | 1 | 6.25 | 4 | 25.00 | 5 | 31.25 | 10 | 62.50 | 6 | 37.50 |
| 34. மொறவக்க | 132 | 2 | 1.52 | 12 | 9.09 | 36 | 27.27 | 52 | 39.39 | 102 | 77.27 | 30 | 22.73 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்காலை | 10 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 20.00 | 4 | 40.00 | 6 | 60.00 | 4 | 40.00 |
| 36. அம்பாந்தோட்டை | 141 | 6 | 4.26 | 10 | 7.09 | 44 | 31.21 | 35 | 24.82 | 95 | 67.38 | 46 | 32.62 |
| 37. வலஸ்முல்லை | 10 | 0 | 0.00 | 0 | 0.00 | 5 | 50.00 | 1 | 10.00 | 6 | 60.00 | 4 | 40.00 |
| 38. யாழ்ப்பாணம் | 3,028 | 345 | 11.39 | 622 | 20.54 | 1,103 | 36.43 | 647 | 21.37 | 2,717 | 89.73 | 311 | 10.27 |
| 39. தீவகம் | 577 | 21 | 3.64 | 59 | 10.23 | 188 | 32.58 | 170 | 29.46 | 438 | 75.91 | 139 | 24.09 |
| 40. தென்மராட்சி | 867 | 89 | 10.27 | 127 | 14.65 | 307 | 35.41 | 212 | 24.45 | 735 | 84.78 | 132 | 15.22 |
| 41. வலிகாமம் | 2,586 | 174 | 6.73 | 446 | 17.25 | 939 | 36.31 | 685 | 26.49 | 2,244 | 86.77 | 342 | 13.23 |
| 42. வடமராட்சி | 1,460 | 287 | 19.66 | 284 | 19.45 | 448 | 30.68 | 294 | 20.14 | 1,313 | 89.93 | 147 | 10.07 |
| 43. கிளிநொச்சி | 2,254 | 190 | 8.43 | 350 | 15.53 | 756 | 33.54 | 611 | 27.11 | 1,907 | 84.61 | 347 | 15.39 |
| 44. மன்னார் | 1,207 | 130 | 10.77 | 245 | 20.30 | 507 | 42.00 | 271 | 22.45 | 1,153 | 95.53 | 54 | 4.47 |
| 45. மடு | 400 | 25 | 6.25 | 64 | 16.00 | 186 | 46.50 | 102 | 25.50 | 377 | 94.25 | 23 | 5.75 |
| 46. வவுனியா - தெற்கு | 1,771 | 208 | 11.74 | 347 | 19.59 | 656 | 37.04 | 420 | 23.72 | 1,631 | 92.09 | 140 | 7.91 |
| 47. வவுனியா - வடக்கு | 496 | 36 | 7.26 | 63 | 12.70 | 200 | 40.32 | 127 | 25.60 | 426 | 85.89 | 70 | 14.11 |
| 48. முல்லைத்தீவு | 1,077 | 126 | 11.70 | 203 | 18.85 | 394 | 36.58 | 255 | 23.68 | 978 | 90.81 | 99 | 9.19 |
| 49. துணுக்காய் | 490 | 27 | 5.51 | 84 | 17.14 | 174 | 35.51 | 135 | 27.55 | 420 | 85.71 | 70 | 14.29 |
| 50. மட்டக்களப்பு | 2,308 | 315 | 13.65 | 427 | 18.50 | 758 | 32.84 | 539 | 23.35 | 2,039 | 88.34 | 269 | 11.66 |
| 51. கல்குடா | 1,341 | 55 | 4.10 | 186 | 13.87 | 461 | 34.38 | 424 | 31.62 | 1,126 | 83.97 | 215 | 16.03 |
| 52. பட்டிருப்பு | 1,396 | 136 | 9.74 | 235 | 16.83 | 447 | 32.02 | 367 | 26.29 | 1,185 | 84.89 | 211 | 15.11 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 2,006 | 303 | 15.10 | 376 | 18.74 | 677 | 33.75 | 428 | 21.34 | 1,784 | 88.93 | 222 | 11.07 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 991 | 38 | 3.83 | 119 | 12.01 | 328 | 33.10 | 303 | 30.58 | 788 | 79.52 | 203 | 20.48 |
| 55. அம்பாறை | 3 | 0 | 0.00 | 1 | 33.33 | - | 0.00 | 1 | 33.33 | 2 | 66.67 | 1 | 33.33 |
| 56. கல்முனை | 2,502 | 398 | 15.91 | 530 | 21.18 | 933 | 37.29 | 468 | 18.71 | 2,329 | 93.09 | 173 | 6.91 |
| 57. சம்மாந்துறை | 1,329 | 97 | 7.30 | 204 | 15.35 | 458 | 34.46 | 406 | 30.55 | 1,165 | 87.66 | 164 | 12.34 |
| -58. மஹாஓய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 59. தெஹியத்தகண்டிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 60. அக்கரைப்பற்று | 1,318 | 158 | 11.99 | 285 | 21.62 | 492 | 37.33 | 305 | 23.14 | 1,240 | 94.08 | 78 | 5.92 |
| 61. திருக்கோவில் | 849 | 47 | 5.54 | 127 | 14.96 | 307 | 36.16 | 263 | 30.98 | 744 | 87.63 | 105 | 12.37 |
| 62. திருகோணமலை | 1,452 | 212 | 14.60 | 280 | 19.28 | 482 | 33.20 | 313 | 21.56 | 1,287 | 88.64 | 165 | 11.36 |
| 63. மூதூர் | 1,210 | 67 | 5.54 | 186 | 15.37 | 424 | 35.04 | 353 | 29.17 | 1,030 | 85.12 | 180 | 14.88 |
| 64. கந்தளாய் | 135 | 7 | 5.19 | 27 | 20.00 | 47 | 34.81 | 29 | 21.48 | 110 | 81.48 | 25 | 18.52 |
| 65. கிண்ணியா | 1,187 | 80 | 6.74 | 153 | 12.89 | 393 | 33.11 | 335 | 28.22 | 961 | 80.96 | 226 | 19.04 |
| 66. திருகோணமலை வடக்கு | 210 | 7 | 3.33 | 24 | 11.43 | 76 | 36.19 | 57 | 27.14 | 164 | 78.10 | 46 | 21.90 |
| 67. குருநாகல் | 471 | 33 | 7.01 | 74 | 15.71 | 149 | 31.63 | 125 | 26.54 | 381 | 80.89 | 90 | 19.11 |
| 68. குளியாப்பிட்டிய | 291 | 26 | 8.93 | 47 | 16.15 | 102 | 35.05 | 84 | 28.87 | 259 | 89.00 | 32 | 11.00 |
| 69 நிக்கவெரட்டிய | 229 | 17 | 7.42 | 37 | 16.16 | 85 | 37.12 | 49 | 21.40 | 188 | 82.10 | 41 | 17.90 |
| 70. மாகோ | 188 | 18 | 9.57 | 35 | 18.62 | 46 | 24.47 | 50 | 26.60 | 149 | 79.26 | 39 | 20.74 |
| 71. கிரியுள்ள | 589 | 52 | 8.83 | 114 | 19.35 | 195 | 33.11 | 158 | 26.83 | 519 | 88.12 | 70 | 11.88 |
| 72. இப்பாகமுவ | 325 | 27 | 8.31 | 67 | 20.62 | 105 | 32.31 | 95 | 29.23 | 294 | 90.46 | 31 | 9.54 |
| 73. புத்தளம் | 1,932 | 243 | 12.58 | 362 | 18.74 | 599 | 31.00 | 480 | 24.84 | 1,684 | 87.16 | 248 | 12.84 |
| 74 சிலாபம் | 271 | 22 | 8.12 | 41 | 15.13 | 105 | 38.75 | 63 | 23.25 | 231 | 85.24 | 40 | 14.76 |
| 75. அனுராதபுரம் | 358 | 27 | 7.54 | 42 | 11.73 | 118 | 32.96 | 83 | 23.18 | 270 | 75.42 | 88 | 24.58 |
| 76. தபுத்தேகம | 55 | 2 | 3.64 | 9 | 16.36 | 15 | 27.27 | 20 | 36.36 | 46 | 83.64 | 9 | 16.36 |
| 77. கெக்கிராவை | 355 | 23 | 6.48 | 53 | 14.93 | 119 | 33.52 | 103 | 29.01 | 298 | 83.94 | 57 | 16.06 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | அதிவிசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 78. கலென்பிந்துனுவெவ | 148 | 8 | 5.41 | 31 | 20.95 | 59 | 39.86 | 40 | 27.03 | 138 | 93.24 | 10 | 6.76 |
| 79. கெப்பித்திகொல்லேவ | 167 | 20 | 11.98 | 27 | 16.17 | 67 | 40.12 | 41 | 24.55 | 155 | 92.81 | 12 | 7.19 |
| 80. பொலன்னறுவ | 376 | 26 | 6.91 | 69 | 18.35 | 137 | 36.44 | 96 | 25.53 | 328 | 87.23 | 48 | 12.77 |
| 81. ஹிங்குரக்கொடை | 14 | 0 | 0.00 | 1 | 7.14 | 6 | 42.86 | 7 | 50.00 | 14 | 100.00 | 0 | 0.00 |
| 82. திம்புலாகல | 102 | 4 | 3.92 | 8 | 7.84 | 42 | 41.18 | 31 | 30.39 | 85 | 83.33 | 17 | 16.67 |
| 83. பதுளை | 823 | 51 | 6.20 | 154 | 18.71 | 296 | 35.97 | 238 | 28.92 | 739 | 89.79 | 84 | 10.21 |
| 84. பண்டாரவளை | 1,041 | 56 | 5.38 | 145 | 13.93 | 374 | 35.93 | 330 | 31.70 | 905 | 86.94 | 136 | 13.06 |
| 85. மஹியங்கணை | 10 | 0 | 0.00 | 0 | 0.00 | 5 | 50.00 | 5 | 50.00 | 10 | 100.00 | 0 | 0.00 |
| 86. வெலிமடை | 603 | 39 | 6.47 | 77 | 12.77 | 233 | 38.64 | 194 | 32.17 | 543 | 90.05 | 60 | 9.95 |
| 87. பசறை | 600 | 30 | 5.00 | 65 | 10.83 | 216 | 36.00 | 201 | 33.50 | 512 | 85.33 | 88 | 14.67 |
| 88. வியலுவ | 112 | 0 | 0.00 | 12 | 10.71 | 40 | 35.71 | 31 | 27.68 | 83 | 74.11 | 29 | 25.89 |
| 89. மொனராகலை | 136 | 7 | 5.15 | 14 | 10.29 | 43 | 31.62 | 44 | 32.35 | 108 | 79.41 | 28 | 20.59 |
| 90. வெல்லவாய | 11 | 1 | 9.09 | 1 | 9.09 | 5 | 45.45 | 2 | 18.18 | 9 | 81.82 | 2 | 18.18 |
| 91. பிபிலை | 96 | 10 | 10.42 | 32 | 33.33 | 29 | 30.21 | 20 | 20.83 | 91 | 94.79 | 5 | 5.21 |
| 92. தனமல்வில | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 93. இரத்தினபுரி | 579 | 28 | 4.84 | 73 | 12.61 | 210 | 36.27 | 165 | 28.50 | 476 | 82.21 | 103 | 17.79 |
| 94. பலாங்கொடை | 345 | 16 | 4.64 | 50 | 14.49 | 145 | 42.03 | 96 | 27.83 | 307 | 88.99 | 38 | 11.01 |
| 95. நிவித்திகல | 211 | 6 | 2.84 | 16 | 7.58 | 63 | 29.86 | 78 | 36.97 | 163 | 77.25 | 48 | 22.75 |
| 96. எம்பிலிபிட்டிய | 288 | 27 | 9.38 | 41 | 14.24 | 126 | 43.75 | 74 | 25.69 | 268 | 93.06 | 20 | 6.94 |
| 97. கேகாலை | 229 | 10 | 4.37 | 30 | 13.10 | 71 | 31.00 | 71 | 31.00 | 182 | 79.48 | 47 | 20.52 |
| 98. மாவனல்லை | 959 | 130 | 13.56 | 204 | 21.27 | 346 | 36.08 | 177 | 18.46 | 857 | 89.36 | 102 | 10.64 |
| 99. தெஹியோவிட்ட | 714 | 46 | 6.44 | 91 | 12.75 | 269 | 37.68 | 199 | 27.87 | 605 | 84.73 | 109 | 15.27 |
| மொத்தம் | **66,983** | **6,228** | **9.30** | **10,899** | **16.27** | **23,528** | **35.13** | **17,653** | **26.35** | **58,308** | **87.05** | **8,675** | **12.95** |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 22 | 0.03 | 82526 | 100.00 |
| 81 - 90 | 1998 | 2.42 | 82504 | 100.00 |
| 71 - 80 | 8282 | 10.04 | 80506 | 97.55 |
| 61 - 70 | 12800 | 15.51 | 72224 | 87.52 |
| 51 - 60 | 15162 | 18.37 | 59424 | 72.01 |
| 41 - 50 | 15887 | 19.25 | 44262 | 53.63 |
| 31 - 40 | 13843 | 16.77 | 28375 | 34.38 |
| 21 - 30 | 8805 | 10.67 | 14532 | 17.61 |
| 11 - 20 | 4453 | 5.40 | 5727 | 6.94 |
| 01 - 10 | 1268 | 1.54 | 1274 | 1.54 |
| 00 - 00 | 6 | 0.01 | 6 | 0.01 |

**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது. உதாரணமாக 31-40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய 82,526 பரீட்சார்த்திகளில் 31-40 வகுப்பாயிடையில் 13,843 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது மொத்தப் பரீட்சார்த்திகளில் 16.77% ஆகும். 40 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 28,375 ஆகும். அதாவது 34.38% ஆன பரீட்சார்த்திகள் 40 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

# பாகம் II

## 2.0 வினா உருப்படிகள், அவற்றின் விடைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வு

**வினாத்தாளின் தன்மை**

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையின் (22) தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் மாணவர் அடைவை மதிப்பிடுவதற்காக மூன்று வினாப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகிய இரண்டும் பரீட்சார்த்திகளுக்கு ஒரே தடவையில் வழங்கப்படுவதோடு அவ் இரண்டு வினாப்பத்திரங்களுக்குமாக ஒதுக்கப்பட்ட காலப்பகுதி 3 மணித்தியாலமாகும். தமிழ் இலக்கியத் திறனை மதிப்பிடுவதற்காக வழங்கப்படும் வினாப்பத்திரம் III இற்கு ஒதுக்கப்படும் காலம் 2 மணித்தியாலமாகும்.

இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 80 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் III | - | 80 புள்ளிகள் |
| மொத்தம் | - | 200 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளி | = | 200 ÷ 2 = 100 |

## 2.1 வினாப்பத்திரம் I இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

- **நேரம் :- 1 மணித்தியாலம்** **மொத்தம் :- 40 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் நான்கு விடைகளைக் கொண்ட **40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியானதை அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.
- இவ்வினாக்கள் பெரும்பாலும் மொழிவளம், இலக்கணத்திறன், நடைமுறைப் பிரயோகம், வாக்கிய அமைப்பு, கிரகித்தல், பந்தியாக்கம் போன்ற திறன்களை மதிப்பிடுவனவாக அமைகின்றன.

**2.1.2 வினாப்பத்திரம் I**

- **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'சூழ மேதி இறங்கும் துறையில்' - இங்கு **மேதி** என்பது
(1) யானை (2) அன்னம் (3) எருமை (4) மான்

**2.** 'கோது இலான் இந்த மொழி கூறுதலும்' - இங்கு **கோது** என்பது
(1) செல்வம் (2) பாதுகாப்பு (3) அறிவு (4) குற்றம்

**3.** 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்' - இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து
(1) உறவினர் (2) பிறர் (3) பகைவர் (4) உற்றார்

**4.** 'சண்டமாருதம் அடித்து ஓய்ந்தது' - **சண்டமாருதம்** என்பதன் எதிர்க்கருத்து
(1) மந்தமாருதம் (2) அமைதி (3) சூறாவளி (4) கடும்புயல்

**5.** 'பெண்களுக்குத் தம்பதியே பெருந் தெய்வம் என்பர் சிலர்' - இங்கு **தம்பதி** என்பது
(1) கணவன் - மனைவி (2) தம்முடைய கணவன்
(3) தம்முடைய ஊர் (4) தாம்பத்திய வாழ்க்கை

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் இணைவு
(1) நெல் - அரிசி (2) கற்றாழை - சோறு
(3) அவரை - பருப்பு (4) தோடை - சதை

**7.** 'பக்குல் பறந்ததாகச் சிலமன் இல்லை'
'அந்தக் கோப்பு இருந்த சிலமன்கூட இல்லை' - இக்கூற்றுகளில் இடம்பெறும் **சிலமன்** என்னும் பேச்சுவழக்குச் சொல் உணர்த்தும் பொருள்
(1) காட்சி (2) கேள்வி (3) சாட்சி (4) அறிகுறி

**8.** **ஆபரணம்**, **பாத்திரம்**, **கப்பல்** என்னும் பொருள்களைத் தரும் சொல்
(1) அணி (2) ஆழி (3) கலம் (4) ஏனம்

**9.** 'உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல டிமான்ட் (Demand) இருக்கிறது' - **டிமான்ட்** என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) பெறுமதி (2) கேள்வி (3) மதிப்பு (4) தேவை

**10.** ஒருவரின் அறிவுக்கூர்மையைச் சுட்டுவதற்குக் கையாளப்படும் அருஞ்சொற்றொடர்
(1) ஒல்காப் பெரும்புகழ் (2) கருவிலே திருவுடையோன்
(3) நுண்மாண் நுழைபுலம் (4) சொல்லின் செல்வர்

**11.** நீண்ட காலம் வாழ்பவன்

(1) சஞ்சீவி (2) சிரஞ்சீவி
(3) அமரன் (4) அசகாயன்

**12.** ஆண் இனத்தை, கடுவன் என்ற சொல்லால் குறிக்கும் வழக்கம் **அற்ற** விலங்கு

(1) நாய் (2) குரங்கு (3) குதிரை (4) பூனை

**13.** 'இது சமநிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகிறது' - **உரைகல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்

(1) சான்று (2) உறுதி
(3) காட்சி (4) தெளிவு

**14.** நடக்கவிருக்கும் நாடகம், வரவேற்பு வைபவம் முதலானவற்றை ஒழுங்காக நடத்தும் நோக்கில் முன்கூட்டியே நிகழ்த்திப்பார்க்கும் செயற்பாடு

(1) அரங்கேற்றம் (2) வெள்ளோட்டம் (3) பரீட்சார்த்தம் (4) ஒத்திகை

**15.** ஒரு செயலைச் செய்வதற்குரிய அடிப்படைத் தகுதி இல்லாதவரால் அச்செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி

(1) அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது
(2) அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்
(3) ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்
(4) கனவிற் கண்ட பணம் செலவுக்கு உதவுமா ?

**16.** '**அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே**' என்ற பழமொழிமூலம் வலியுறுத்தப்படுவது

(1) நன்றியுணர்வு (2) துரோகத்தனம் (3) நிதானம் (4) நேர்மை

**17.** 'அது இப்படிக் காலைவாரியும் எனக்குப் புத்தி வரவில்லை' - **காலைவாருதல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்

(1) கால் இடறல் (2) ஏமாற்றுதல்
(3) காலூன்றல் (4) எதிர்த்துநிற்றல்

**18.** பின்வருவனவற்றுள் இணைமொழி

(1) ஆடியாடி (2) கன்னங்கரிய (3) ஓடியாடி (4) நெறுநெறு

**19.** (அ) அவர் நன்றாகப் படித்தவர்தான்.

(ஆ) மேடையில் ஏறிப் பேசுவதென்றால் அவருக்கு நடுக்கம்.

மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்

(1) ஆகவே (2) என்றாலும் (3) ஆதலால் (4) ஏனெனில்

**20.** பின்வருவனவற்றுள் பெயரடியாகப் பிறந்த **வினைச்சொல்**

(1) சித்திரித்தான் (2) பெற்றான் (3) காட்டினான் (4) வாழ்க

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககரம் 'g' என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
(1) கப்பல் (2) தேகம் (3) தங்கம் (4) சுகம்

**22.** இடைநிலை அமையப்பெற்ற பெயர்ப்பகுபதம்
(1) ஓடுதல் (2) மரங்கள் (3) கூத்தன் (4) அறிஞன்

**23.** பின்வருவனவற்றுள் வினையடை
(1) நடந்து (2) நேற்று (3) அழகான (4) வேகமான

**24.** பின்வருவனவற்றுள் வேற்றுமைத் தொகையாய் அமைந்த தொடர்
(1) குடும்பச் சொத்து (2) தேடிய சொத்து
(3) பொதுச் சொத்து (4) அழியாச் சொத்து

**25.** பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) மணியோசை (2) கடலலை (3) பூங்கொடி (4) மரவேர்

**26.** 'செத்த மாட்டில் உண்ணி கழன்றது போல' - இத்தொடரில் இடம்பெற்ற **வேற்றுமைப் பொருள்**
(1) இடம் (2) ஒப்பு (3) நீங்கல் (4) ஏது

**27.** 'சாலச் சிறந்தது' - இங்கு **சால** என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
(1) பொருத்தம் (2) உறுதி (3) கூர்மை (4) மிகுதி

**28.** 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' - இங்கு **கற்றோர்** என்பது
(1) தொழிற்பெயர் (2) காரணப்பெயர்
(3) வினையாலணையும்பெயர் (4) ஆக்கப்பெயர்

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) அஃறிணை : மரம், செடி, குருவி
(2) ஆண்பால் : வந்தான், படித்தவன், நோயாளி
(3) பெண்பால் : மங்கை, தங்கை, வந்தாள்
(4) பலர்பால் : ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்

**30.** (1) உவமைத்தொகை : பால்நிலா, மதிமுகம், கயல்விழி
(2) உம்மைத்தொகை : வீடுவாசல், கோயில்குளம், சோறுகறி
(3) பண்புத்தொகை : வெண்சங்கு, நேர்கோடு, வட்டநிலா
(4) வினைத்தொகை : ஏவுகணை, சுடுசோறு, கடுகதி

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**31.** வீதி அபிவிருத்தித் திட்டத்தால் தம் காணிகளை இழந்தவர்களுக்கு தக்க ..................... வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.
(1) உதவி (2) இழப்பீடு
(3) காப்பீடு (4) அனுசரணை

**32.** நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அறிவித்தல் அரச ..................... வெளியிடப்பட்டுள்ளது.
(1) சுற்றறிக்கையில் (2) சட்டமூலத்தில்
(3) வர்த்தமானியில் (4) விளம்பரத்தில்

**33.** ஜனாதிபதி தேர்தலுக்குரிய ..................... தாக்கல் செய்வதற்கான முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.
(1) பதிவு (2) விண்ணப்பம்
(3) வேட்புமனு (4) விஞ்ஞாபனம்

**34.** எமது பாடசாலை தாபிக்கப்பெற்று ஐம்பது ஆண்டு நிறைவடைந்தமையைக் கொண்டாடுமுகமாக .................... இடம்பெறவுள்ளது.

(1) வைரவிழா (2) மணிவிழா
(3) வெள்ளிவிழா (4) பொன்விழா

**35.** தேசிய .................... காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் எமது நாட்டின் வரலாறை உணர்த்திநிற்கின்றன.

(1) கலாபவனத்தில் (2) நூதனசாலையில்
(3) சுவடிகள் காப்பகத்தில் (4) காட்சிக்கூடத்தில்

**36.** ஆணைக்குழுவின் .................... உயர்கல்வி விருத்திக்குப் பெரிதும் உதவும்.

(1) நிபந்தனைகள் (2) கோரிக்கைகள்
(3) பரிந்துரைகள் (4) பிரேரணைகள்

● கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுது என்று குரங்கு தொட்டு,
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதொறும் குதித்துத் தாவி,
கீழ் உள்ள விழுதை எல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி,
உச்சிபோய்த் தன் வால் பார்க்கும்

**37.** இக் கவிதை மூலம் கவிஞர் வாசகரிடம் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி

(1) அச்சம் (2) ஏமாற்றம் (3) நகைச்சுவை (4) திகைப்பு

**38.** 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல்' என்னும் உவமை கையாளப்பட்டதன் நோக்கம்

(1) விழுதின் தோற்றத்தை உணர்த்துதல் (2) குரங்கின் பதற்றத்தை உணர்த்துதல்
(3) குரங்கின் இயல்பை உணர்த்துதல் (4) பாம்பின் பயங்கரத்தை உணர்த்துதல்

**39.** இப்பாடல் விவரிக்கும் காட்சியோடு மிகப் பொருந்தி வரும் **பழமொழி**

(1) கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
(2) தலையிடியும் காய்ச்சலும் தனக்குவந்தால்தான் தெரியும்.
(3) மழைக்கால இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது.
(4) மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - அவ்வகையாகத் தமிழிலே தோன்றிய முதலாவது காவியம் சிலப்பதிகாரமாகும்.
ஆ - காவியம் என்பது ஒரு பேரிலக்கிய வடிவமாகும்.
இ - அது இளங்கோவடிகளாற் பாடப்பட்டது.
ஈ - அது ஒரு கதையினை, தொடர்ச்சியாக அமையும் பல செய்யுள்களால் எடுத்துரைப்பது.
உ - அவரைப் போலவே சாத்தனார் மணிமேகலை என்ற காவியத்தைப் படைத்தார்.

(1) உ, அ, ஈ, இ, ஆ (2) இ, அ, ஆ, ஈ, உ
(3) ஆ, ஈ, அ, இ, உ (4) ஆ, இ, உ, ஈ, அ

## 2.1.3 வினாப்பத்திரம் I இன் புள்ளி வழங்கும் திட்டம்

| வினாஇல. | விடை | வினாஇல. | விடை |
|---|---|---|---|
| 01 | 3 | 21 | 3 |
| 02 | 4 | 22 | 4 |
| 03 | 2 | 23 | 2 |
| 04 | 1 | 24 | 1 |
| 05 | 2 | 25 | 2 |
| 06 | 4 | 26 | 3 |
| 07 | 4 | 27 | 4 |
| 08 | 3 | 28 | 3 |
| 09 | 2 | 29 | 2 |
| 10 | 3 | 30 | 4 |
| 11 | 2 | 31 | 2 |
| 12 | 3 | 32 | 3 |
| 13 | 1 | 33 | 3 |
| 14 | 4 | 34 | 4 |
| 15 | 1 | 35 | 2 |
| 16 | 1 | 36 | 3 |
| 17 | 2 | 37 | 3 |
| 18 | 3 | 38 | 2 |
| 19 | 2 | 39 | 4 |
| 20 | 1 | 40 | 3 |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்

## 2.1.4 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு** 1 (இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது).

மேலே உள்ள வரைபின்படி அதிகளவான மாணவர்கள் 17 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்துள்ளனர். 17 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்தோர் 90% ஆகும். எனவே இவ் வினாவின் இலகுச்சுட்டி 0.9 ஆகும். அதேபோல மிகக்குறைவான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ள வினா இலக்கம் 23 ஆகும். இவ்வினாவிற்கு 17% ஆனோரே சரியான விடையளித்துள்ளனர். எனவே இதன் இலகுதன்மை 0.17 ஆகும். இதற்கேற்ப 23 ஆம் வினாவின் இலகுதன்மை குறைந்ததாகவும் (கடினமானதாகவும்) 17 ஆம் வினா இலகுதன்மை கூடியதாகவும் (இலகுவானதாகவும்) காணப்படுகின்றது.

### 2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவினையும் தெரிவுசெய்தோர் வீதம் | | | | விடுபட்டோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 3 | 6.10 | 13.33 | 77.97 | 2.50 | 0.10 |
| 2 | 4 | 4.87 | 6.03 | 32.60 | 56.23 | 0.27 |
| 3 | 2 | 23.43 | 48.13 | 22.67 | 5.53 | 0.23 |
| 4 | 1 | 54.00 | 25.67 | 9.03 | 11.10 | 0.20 |
| 5 | 2 | 19.80 | 75.07 | 2.00 | 3.00 | 0.13 |
| 6 | 4 | 7.23 | 26.23 | 13.03 | 53.30 | 0.20 |
| 7 | 4 | 2.70 | 2.53 | 8.70 | 85.90 | 0.17 |
| 8 | 3 | 23.47 | 16.60 | 50.03 | 9.60 | 0.30 |
| 9 | 2 | 20.23 | 55.70 | 22.23 | 1.67 | 0.17 |
| 10 | 3 | 7.83 | 51.93 | 27.77 | 12.10 | 0.37 |
| 11 | 2 | 10.67 | 68.43 | 9.80 | 10.80 | 0.30 |
| 12 | 3 | 11.57 | 10.67 | 67.77 | 9.73 | 0.27 |
| 13 | 1 | 65.53 | 21.07 | 4.70 | 8.47 | 0.23 |
| 14 | 4 | 8.60 | 6.70 | 7.07 | 77.50 | 0.13 |
| 15 | 1 | 60.23 | 4.70 | 27.13 | 7.60 | 0.33 |
| 16 | 1 | 34.50 | 57.80 | 3.27 | 4.27 | 0.17 |
| 17 | 2 | 2.33 | 89.90 | 3.10 | 4.47 | 0.20 |
| 18 | 3 | 6.07 | 42.57 | 40.83 | 10.37 | 0.17 |
| 19 | 2 | 5.00 | 88.20 | 3.80 | 2.83 | 0.17 |
| 20 | 1 | 38.47 | 8.30 | 11.60 | 41.40 | 0.23 |
| 21 | 3 | 15.17 | 11.43 | 66.37 | 6.83 | 0.20 |
| 22 | 4 | 11.90 | 27.07 | 22.43 | 38.27 | 0.33 |
| 23 | 2 | 48.50 | 17.47 | 12.27 | 21.53 | 0.23 |
| 24 | 1 | 28.10 | 27.73 | 18.87 | 24.87 | 0.43 |
| 25 | 2 | 20.60 | 54.63 | 13.77 | 10.83 | 0.17 |
| 26 | 3 | 5.93 | 16.87 | 71.70 | 5.27 | 0.23 |
| 27 | 4 | 50.47 | 18.60 | 9.97 | 20.67 | 0.30 |
| 28 | 3 | 19.73 | 44.43 | 19.43 | 16.07 | 0.33 |
| 29 | 2 | 20.13 | 69.10 | 4.67 | 6.03 | 0.07 |
| 30 | 4 | 10.17 | 16.43 | 13.10 | 60.03 | 0.27 |
| 31 | 2 | 13.60 | 70.70 | 9.33 | 6.13 | 0.23 |
| 32 | 3 | 20.80 | 10.43 | 52.03 | 16.47 | 0.27 |
| 33 | 3 | 9.87 | 10.63 | 75.30 | 4.00 | 0.20 |
| 34 | 4 | 13.47 | 11.27 | 16.73 | 58.17 | 0.37 |
| 35 | 2 | 6.23 | 73.93 | 5.63 | 14.07 | 0.13 |
| 36 | 3 | 18.10 | 24.94 | 46.41 | 10.55 | 0.00 |
| 37 | 3 | 44.00 | 25.76 | 19.04 | 11.19 | 0.00 |
| 38 | 2 | 6.41 | 61.39 | 16.47 | 15.73 | 0.00 |
| 39 | 4 | 12.36 | 8.68 | 9.39 | 69.57 | 0.00 |
| 40 | 3 | 2.30 | 5.04 | 74.78 | 17.87 | 0.00 |

**அட்டவணை 6** : வினாத்தாள் I இன் தெரிவுகளைத் தெரிவுசெய்துள்ள விதம் தொடர்பான சதவீத பரம்பல்

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவுசெய்த மாணவர் சதவீதம் ஆகியன நிழற்றிக் காட்டப்பட்டுள்ளன.

விடுபட்டோர் (Missing) என்பதால் காட்டப்படுவது, வினாவிற்கு தெரிவுகளை மேற்கொள்ளாத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட மாணவர்களின் சதவீதம் ஆகும்.

## 2.1.6 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வு

### 2.1.6.1 வினாப்பத்திம் I இன் பகுப்பாய்வுச் சுருக்கம்

வினாப்பத்திரம் I ஆனது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இவை மொழிவளம், இலக்கணப் பயன்பாட்டுத் திறன், கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் ஆகிய தொனிப்பொருள்களின்கீழ் உள்ளடக்கப்படுகின்றன. இப்பல்தேர்வு வினாக்களில் 9 வினாக்கள் 40% இலும் குறைவான இலகுதன்மையைக் கொண்டுள்ளது. இவற்றுள் இலக்கணப் பயன்பாட்டுத்திறன் என்ற தொனிப்பொருள் சராசரியாகக் குறைந்த இலகுதன்மையைக் காட்டியுள்ளது.

மாணவர்களுக்குப் பரிச்சயமான பாடப்பகுதிகளிலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்ட வினா உருப்படிகளுக்கு அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளபோதிலும் பழமொழிகள், அருஞ்சொற்றொடர்கள் போன்ற பகுதிகளில் மாணவர்களிடையே தெளிவான விளக்கமின்மை காணப்படுகிறன.

இலக்கணப் பயன்பாட்டினைப் பொறுத்தமட்டில் வினைச்சொல், பெயர்ப்பகுபதம், வேற்றுமைகள் என்பனபற்றிய தெளிவின்மை மாணவர்களிடையே காணப்படுவது புலப்படுகின்றது. மேலும் மாற்றொலியன்கள், புணரியல் தொடர்பான வினாக்களிலும் பரீட்சார்த்திகளுள் சிலர் சரியான விடையைத் தெரிவுசெய்வதில் இடர்ப்பட்டுள்ளனர்.

வினாப்பத்திரம் I இன் மொழிவளத் தொனிப்பொருளானது தேர்ச்சி இலக்கம் 12 இன் அடைவை பிரதானமாகப் பரீட்சிக்கின்றது. மாணவர்கள் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான முறையில் பிரயோகிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலக்கணப் பயன்பாட்டுத்திறன் தொனிப்பொருளானது தேர்ச்சி இலக்கம் 13 இன் அடைவை பரீட்சிக்கின்றது. இத்தேர்ச்சியின்மூலம் மாணவர்கள் மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியை செம்மையாக கையாள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தேர்ச்சி இலக்கம் 10 இல் எதிர்பார்க்கப்படும் எழுத்தாக்க நுட்பங்களை மாணவர்கள் பெற்றுள்ளனரா? என்பதையும் இது பரீட்சிக்கின்றது.

வினா இல. 31 - 40 வரையானவை தேர்ச்சி இலக்கங்கள் 08, 09, 12 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. தேர்ச்சி இல. 08, 09 இன்மூலம் தரப்பட்ட விடயங்கள் அல்லது செய்யுள் - கவிதைப் பகுதிகளை அவதானமாக கிரகித்து எழுத்துப்பொறிமுறைகளை அனுசரித்து வழுவின்வின்றி எழுதுவதுடன் தொடர்புடையதாகும்.

வினாப்பத்திரம் I இற்கான அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு மாணவர்களுக்கு வகுப்பறைரீதியான பயிற்சிகளை வழங்குதல் அவசியமாகும். இப்பயிற்சிகளை வழங்கும்போது, மாணவர்கள் வினாக்களில் இடம்பெறும் முதன்மைச் சொற்களை அறிந்துகொள்வதற்கும் பாடநூலில் தாமாகத் தேடியறியும் வேறு நூல்களிலும் காணப்படும் பழமொழிகள், அருஞ்சொற்கள், கலைச்சொற்கள், மரபுத்தொடர்கள் என்பவற்றைப் பொருள்களோடு ஆராய்ந்தறிவதற்கும் தரப்படும் விடயங்களைச் சரியாகக் கிரகிப்பதற்குமான ஆற்றலை வளர்த்துக்கொள்வதை முதன்மைப்படுத்துதல்வேண்டும்.

### 2.1.6.2 பாடத்தொனிப்பொருள் அடிப்படையிலான பகுப்பாய்வு




வரைபு 2 (இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது).

| வினா இல. | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் இலகுதன்மையும் | | இலகுதன்மை குறைந்த வினாவும் இலகுதன்மையும் | |
|---|---|---|---|---|---|
| | | வினா இல. | இலகுதன்மை | வினா இல. | இலகுதன்மை |
| 1 - 18 | மொழி வளம் | 17 | 90% | 10 | 28% |
| 19 - 30 | இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 19 | 88% | 23 | 17% |
| 31 - 40 | கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் | 33<br>40 | 75%<br>75% | 37 | 19% |

**அட்டவணை 7 :** பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் இலகுதன்மை கூடிய வினாக்களும் இலகுதன்மை குறைந்த வினாக்களும்




**வரைபு 3** (RD/16/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது).

- மொழிவளம் என்ற தொனிப்பொருளின் கீழ் வழங்கப்பட்ட 18 வினாக்களில் இலகுதன்மை கூடியது வினா இலக்கம் 17 ஆகும். அதன் இலகுதன்மை 90% ஆகும். இத்தொனிப்பொருளின் கீழ் இலகுதன்மை குறைந்த வினா இலக்கம் 10 ஆகும். அதன் இலகுதன்மை 28% ஆகும்.

- இலக்கணப் பயன்பாட்டுத் திறன் என்ற தொனிப்பொருளின்கீழ் வழங்கப்பட்ட 12 வினாக்களில் இலகுதன்மை கூடிய வினா இலக்கம் 19 ஆகும். அதன் இலகுதன்மை 88% ஆகும். இலகுதன்மை குறைந்த வினா இலக்கம் 23 ஆகும். அதன் இலகுதன்மை 17% ஆகும்.

- கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் என்ற தொனிப்பொருளில் அமைந்த 10 வினாக்களில் இலகுதன்மை கூடியது வினா இலக்கங்கள் 33, 40 என்பன ஆகும். அவற்றின் இலகுதன்மை 75% ஆகும். இலகுதன்மை குறைந்தது வினா இலக்கம் 37 ஆகும். அதன் இலகுதன்மை 19% ஆகும்.

- 40 வினாக்களில் 31 வினாக்களுக்கு 40% இற்கு மேலான மாணவர்கள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

வினாப்பத்திரம் I இல் 30% ஐ விடக் குறைந்த இலகுதன்மையைக்கொண்ட வினாக்களும் அவற்றிற்குச் சரியாக விடையளித்தோர் வீதமும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொனிப்பொருள் | வினா இல. | சரியான விடையைத் தெரிவுசெய்தோர் வீதம் |
|---|---|---|
| மொழி வளம் | 10 | 28 % |
| | 16 | 35 % |
| இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 20 | 38% |
| | 22 | 38% |
| | 23 | 17% |
| | 24 | 28% |
| | 27 | 21% |
| | 28 | 19% |
| கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் | 37 | 19% |

அட்டவணை **8 :** பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் 30%தைவிட குறைவான இலகுதன்மை கொண்ட வினாக்கள்

**மொழி வளம் - வினா இல 1 - 18**

**அவதானிக்கப்பட்டவை :**

- 1-18 வரையான வினாக்களில் 10, 16 ஆகிய வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவுசெய்வதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.
- அருஞ்சொற்றொடர்பற்றிய சரியான விளக்கமின்மை காரணமாக மாணவர்கள் வினா இலக்கம் 10 இல் இடர்பட்டுள்ளனர்.
- பழமொழிகள்பற்றிய சரியான புரிதலின்மையே வினா இலக்கம் 16 இல் மாணவர்கள் இடர்பட்டமைக்கான காரணமாகும்.

**ஆலோசனைகள் :**

- அருஞ்சொற்றொடர்கள்பற்றிக்கூறி அதனுடைய பொருள்களை வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் உபயோகிப்பதற்குப் போதுமான பயிற்சிகளை வழங்குவதன்மூலம் மாணவர்களைத் தெளிவுபடுத்தலாம்.
- பழமொழிகளை எடுத்துக்கூறி அதன் பொருளை விளங்கவைத்து, வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதற்கான பயிற்சிகளை வழங்கி ஊக்குவித்தல்.

**இலக்கணப் பயன்பாட்டுத் திறன் (வினா இல. 19 - 30)**

**அவதானிக்கப்பட்டவை :**

- ஏனைய தொனிப்பொருள்களோடு ஒப்பிடுகையில் இலக்கணப் பயன்பாட்டுத் திறன் என்ற தொனிப்பொருளுக்கான இலகுதன்மை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது.
- வினா இலக்கங்கள் 20,22, 23, 24 என்பன முறையே வினைச்சொல், இடைநிலை, வினையடை, தொகைநிலைத் தொடர் என்பனபற்றிய தெளிவின்மை மாணவரிடையே காணப்படுவதைப் புலப்படுத்துகின்றது.
- அதேபோல, 27 ஆம், 28 ஆம் வினாக்களில் குறைந்த அடைவுமட்டம் பெறப்பட்டதன் விளைவாக மாணவர்களிடையே உரிச்சொற்கள், காரணப்பெயர், வினையாலணையும் பெயர் என்பனபற்றிய புரிதல் காணப்படாமை தெளிவாகின்றன.

**ஆலோசனைகள் :**

- இலக்கணத்தை கடினமானதொன்றல்லாமல் இலகுவான முறையில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலமும் பாடல்களுக்கூடாக இலக்கணப் பகுதிகளை எடுத்து விளக்கி, போதிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களின் இலக்கண அறிவை விருத்தி செய்ய உதவ வேண்டும்.

**கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் (வினா இல. 31 - 40)**

**அவதானிக்கப்பட்டவை:**

- வினா இலக்கம் 37 கவிதையின்மூலம் வாசகரிடம் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி பற்றியது.
- தரப்பட்ட கவனக் கலைப்பான்களில் ஒன்றான முதலாவது விடை பரீட்சார்த்திகளிடம் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தமையால் இவ்வினாவுக்கான இலகுதன்மை குறைவாகக் காணப்படுகிறது.

**ஆலோசனைகள் :**

- பாடப்பகுதிகள் மட்டுமன்றி வேறு பொருத்தமான நூல்களிலிருந்தும் கவிதைகளைத் தெரிவுசெய்து ஆசிரியர் கூறவந்த விடயம், அணிச் சிறப்பு, கடின பதங்களுக்கான பொருள் என்பவற்றை எடுத்துகூறி, போதிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களின் திறனை விருத்தி செய்யலாம்.

### 2.1.6.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்:

**I. மொழி வளம் - வினா இல. 1 - 18**

வினா இலக்கம் 1- 5 வரையானவை இலக்கியத்தோடு தொடர்புபட்டவையாக அவர்களுக்குப் பரிச்சயமானவையாக இருப்பதனால் பரீட்சார்த்திகள் இலகுவாக விடையளித்துள்ளனர். அதேபோல, மரபுப் பெயர் தொடர்பான 6 ஆம், 12 ஆம் வினாக்களும் பரிச்சயமானதே. வினா இலக்கம் 7 இற்கு 86% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினா பேச்சுவழக்குச் சொல் பற்றியது. இவ்வினா மிகவும் இலகுதன்மை கூடியதாக அமைந்தமையால் 86% ஆன பரீட்சார்த்திகள் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர்.

வினா இல. 8 மொழிவளம் தொடர்பானது. இவ்வினா மிக இலகுவானதாக இருந்தும் 50% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல. 9 ஆங்கில கலைச்சொல்பற்றியது. பாடநூலில் குறிப்பிட்ட சொல்லின் பொருள் இருந்தும் 56% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல - 10 அருஞ்சொற்றொடர் பற்றியது. பாடநூலில் இவ்விடயம் இருந்தும் 28% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். 11, 13, 14 ஆகிய வினாக்கள் தொடர்மொழிக்கு ஒரு மொழி பற்றியவை. பாடநூலில் இவற்றுக்குரிய விளக்கம் இருந்தமையால் 66% - 78% வரையான பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்திருந்தனர்.

வினா இல. 15, 16 இல் பழமொழி தொடர்பான வினாக்களில் 60% ஆன பரீட்சார்த்திகள் வினா இல. 15 க்கு சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளபோதிலும் 35% ஆனவர்களே வினா இல 16 க்கு சரியான விடையளித்துள்ளனர். வினா இலக்கம் 16 இன் இரண்டாவது தெரிவு ஒரு கவனக் கலைப்பானாகக் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். மிக இலகுவானதும் நடைமுறை சார்ந்ததுமாக இருந்தும் சரியான விடையளிக்கத் தவறியமைக்குக் காரணம் பழமொழிகள்பற்றிய பயிற்சி இன்மையே ஆகும். நடைமுறையிலுள்ள பழமொழிகள்பற்றிய பயிற்சி மாணவர்களுக்கு இருத்தல் மிக அவசியமாகும்.

மரபுத்தொடர்பற்றிய வினா இல. 17 இற்கு 90% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இலக்கியப்பாடப் பகுதியில் இடம்பெற்ற மரபுத்தொடராக இவ்வினா அமைந்தமையால் மிகச்சரியாக விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இணைமொழிபற்றிய 18 ஆம் வினாவில் இணைமொழியை இனங்காண்பதில் 41% ஆனவர்களே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இங்கு இணைமொழி, அடுக்கிடுக்குத்தொடர் என்பன தொடர்பான சரியான தெளிவின்மை காரணமாக 43% ஆனவர்கள் பிழையான தெரிவைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

**II. இலக்கணப் பயன்பாட்டுத் திறன் - வினா இல. 19 - 30**

வினா இலக்கங்கள் 20, 22, 23, 24, 27, 28 ஆகியவற்றுக்கு 19% முதல் 38% வரையினரே மிகச் சரியான விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர். வினைச்சொல், பெயர்ப்பகுபதம், வினையடை, வேற்றுமைத்தொகை, உரிச்சொல், வினையாலணையும் பெயர்பற்றிய தெளிவான விளக்கமின்மை மாணவர்களிடையே காணப்படுவதை இது புலப்படுத்துகிறது. இவ்விடயம் சார்பாக போதிய பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டியது அவசியமாகும்.

வினா இல. 21 - மாற்றொலியன்கள் தொடர்பானது. 66% ஆனவர்கள் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல - 25 புணரியல் தொடர்பானது. இதற்கு 55% ஆனவர்களே மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்திருந்தனர். வினா இல. 29, 30 ஆகிய திணை, பால், தொகை நிலைத்தொடர் தொடர்பான வினாக்களுக்கு முறையே 69%, 60% ஆனவர்கள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல. 29 க்கு தவறான விடையான முதலாம் விடையை 20% ஆன பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருந்தனர். விடை அஃறிணைச் சொல் பற்றியதாக இருந்தும் வினாவை தவறாகப் புரிந்துகொண்டமை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**III. நடைமுறை வழக்குச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் - வினா இல. 31 - 40**

வினா இல 31, 33, 34 , 35, முதலியவற்றுக்கான சரியான விடைகளை முறையே 71% ,75%, 58%, 74% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளனர். வினா இலக்கம் 32 இல் வர்த்தமானி, சுற்றறிக்கை போன்ற சொற்பிரயோகங்களை பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் அறிவை மாணவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆதலால் 52% ஆனவர்களே இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர். அதேபோல வினா இல. 36 இல் நிபந்தனைகள், பரிந்துரைகள், கோரிக்கைகள் ஆகிய சொற்பிரயோகங்களுக்கிடையேயான தெளிவின்மை காரணமாக 46% ஆனவர்களே இவ்வினாவுக்குச் சரியாக விடையை அளித்திருந்தனர்.

வினா இல. 37 - 39 வரையானவை, தரப்பட்ட பாடலை வாசித்து, கிரகித்து விடையளிக்கும் வகையில் அமைந்துள்ளன. இவ் வினாக்களில் 37 ஆம் வினா இலகுதன்மை குறைந்த வினாவாக உள்ள அதேவேளை வினா இலக்கங்கள் 38, 39 என்பவற்றுக்கு முறையே 60%, 70% ஆன மாணவர்கள் சரியாக விடையளித்துள்ளனர்.

வினா இல. 37 இற்குப் 19% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். 44% ஆன பரீட்சார்த்திகள் தவறான விடையான முதலாவது விடையினைத் தெரிவுசெய்திருந்தனர். கவிதை மூலம் வாசகரிடத்தில் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி என்பதே வினாவாக அமைந்திருந்தது. விடையினைத் தெரிவுசெய்வதில் கவனக்கலைப்பானாக, முதலாவது தெரிவு இருந்தமையால் சரியான விடையை இனங்காண்பதில் மாணவர்கள் மிகுந்த சிரமப்பட்டுள்ளனர்.

வினா இல. 40 இல் 75% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். கொடுக்கப்பட்ட வாக்கியங்கள் இலகுவானதாக அமைந்தமையால் மிக இலகுவாகச் சரியான தெரிவை மேற்கொண்டுள்ளனர்.

**2.1.6.4 வினாப்பத்திரம் I இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள்**

* வினாப்பத்திரம் I ஆனது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இதற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அவ்விடையின் இலக்கத்தைக் கொண்ட கூட்டினுள் தெளிவாகப் புள்ளியிடல் வேண்டும்.

* முதல் 20 வினாக்களும் பெரும்பாலும் மொழிவளத்தைக் கணிப்பிடுவதாக அமைவதால் பாடநூலின் துணையோடு அருஞ்சொற்கள், பழமொழிகள், மரபுத்தொடர்கள், கலைச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் ஆகியவை தொடர்பாக அறிந்துகொள்வதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

* அடுத்த 10 வினாக்கள் மாணவர்களின் இலக்கணத் திறனைக் கணிப்பிடும் வகையில் அமைவன. இலக்கண அறிவை மேம்படுத்துவதற்கு இலக்கியப் பாடத்தினூடாக இலக்கணத்தைக் கற்பிப்பதுடன் மட்டுமன்றி அவை தொடர்பான பயிற்சிகளை வழங்குதல், இலக்கணப் போட்டிகளை நடாத்துதல் போன்றன மூலமும் அடைவுமட்டத்தை மேம்படுத்தலாம்.

* இறுதி 10 வினாக்கள் கிரகித்தல், மொழியமைப்பு, கலைச்சொல்லறிவு, பந்தியாக்கம் போன்ற திறன்களை மதிப்பிடுவதாக அமைவன. கவிதையை நயந்து கவிஞர் கூறவந்த முக்கிய விடயம், அதற்குத் துணையாக கையாளப்பட்டுள்ள விடயங்கள் என்பனவற்றைக் கண்டறியும் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

* மொழியறிவு விருத்திக்கு சுயவாசிப்பு பிரதான காரணியாக விளங்குவதால் வகுப்பறையில் வாசிப்புத்திறனை விருத்திசெய்வதனூடாக வினாப்பத்திரம் I இற்கான மிகச்சரியான விடையைக் கண்டறியும் திறனை வளர்ப்பதற்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

* விடையளிக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்ய இடர்ப்படின் கொடுக்கப்பட்ட கவனக்கலைப்பான்களை (பிழையான விடைகளை) நீக்கி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்வதற்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும்.

* அதிக பயிற்சிகளைச் செய்வதன்மூலம் நேரமுகாமைத்துவத்தை மேம்படுத்தி இவ்வினாப்பத்திரத்துக்குரிய புள்ளிகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

## 2.2 வினாப்பத்திரம் II இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

- **நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம் :- 80 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10 ஆகும்.
   ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல். வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும் - 25 புள்ளிகள்
3. சுருக்கம் எழுதுதல் - 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் - 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் - 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15 = 80 புள்ளிகள்**

### 2.2. 2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்




வரைபு 4 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வினாப்பத்திரத்தின் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும். எனினும் முதலாம், இரண்டாம் வினாக்களுக்கு 99% ஆனோரும் மூன்றாம், நான்காம் வினாக்களுக்கு 98% ஆனோரும் ஐந்தாம் வினாவுக்கு 95% ஆனோருமே விடையளித்துள்ளனர்.

## 2.2.3 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 5** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

மேலேயுள்ள வரைபின் அடிப்படையில் வினா இலக்கம் 1 இன் உபபிரிவு (v),(vii) என்பவற்றுக்கான இலகுச்சுட்டி 0.73 ஆகும். இங்கு இலகுதன்மை குறைந்த வினாவாக வினா இலக்கம் 1 இன் பிரிவு (iii) உம், வினா இலக்கம் 2 இன் உப பிரிவு (iii) உம் காணப்படுகின்றன. இவற்றின் இலகுதன்மை 21% ஆகும். எனவே இவ்வினாப்பத்திரத்தின் இலகுவான வினாக்களாக 1 ஆம் வினாவின் பிரிவுகள் (v), (vii) என்பனவும், கடினமான வினாக்களாக 1 ஆம் வினாவின் (iii) ம் பிரிவு, 2 ஆம் வினாவின் (iii) ஆம் பிரிவு என்பனவும் காணப்படுகின்றன.

## 2.2.4 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




**வரைபு 6** - (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகின்றது.

உதாரணம் :

முதலாம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இப்புள்ளிகளில் 00% - 25% வீச்சில், அதாவது 0-5 புள்ளிகளை 20% ஆனோர் பெற்றுள்ளனர். அதேபோன்று 26%-50% வீச்சில், அதாவது 6-10 புள்ளிகளை 35% ஆனோரும், 51% - 75% வீச்சில், அதாவது 11-15 புள்ளிகளை 31% ஆனோரும் 76%-100% வீச்சில், அதாவது 16-20 புள்ளிகளை 14% ஆனோரும் பெற்றுள்ளனர்.

## 2.2.5 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வு

### 2.2.5.1 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வுச் சுருக்கம்

வினாப்பத்திரம் II ஆனது மாணவர்களின் எழுத்தறிவைப் பரீட்சித்தலை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் கட்டாயமானவை என்றபோதிலும் சில மாணவர்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்திருக்கவில்லை.

வினாப்பத்திரம் II இன் குறுவினாக்கள் இலக்கண அடிப்படையில் அமைவதால், இவை தேர்ச்சி இல. 08 இன் அடைவை பரீட்சிக்கின்றன. இதன் மூலம் எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து வழுவின்றி நேர்த்தியாக எழுதுதல் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அநேகமான மாணவர்கள் வினா இலக்கம் 1 இன் குறுவிடை வினாக்களிலும், வினா இலக்கம் 4 இன் கிரகித்தல் பகுதியிலும் எதிர்பார்த்த அடைவுமட்டத்தை அடையவில்லை. இலக்கண வழுக்கள், எழுவாய் பயனிலைகளைச் சரியாகப் பயன்படுத்துவதில் இடர்ப்பட்டமை, திசைச் சொற்கள், நிறுத்தற் குறியீடுகளின் பயன்பாடு பற்றிய தெளிவின்மை என்பன இதற்கான காரணங்களாகும்.

இரண்டாம் வினாவானது எழுத்தாக்க நுட்பங்களைப் பரீட்சிக்கும் தேர்ச்சி இல.10, படைப்புகளை வாசித்த அனுபவங்கள் ஊடாக படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களை சுயமாக எழுத எதிர்பார்க்கும் தேர்ச்சி இலக்கம் 11 ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். கட்டுரை வினாக்களுக்கான விடைகளை எழுதும்போது வழங்கப்பட்டிருந்த வழிகாட்டற்குறிப்புகளை சரியாகக் கிரகித்துப் பின்பற்றாமை ஒரு குறைபாடாக அவதானிக்கப்பட்டது. மேலும் கட்டுரை சிறுகதை / உரையாடலுக்கான பொருத்தமான அமைப்பு, களம், எழுத்துப் பாங்கு என்பனவும் திருப்திகரமான வகையில் பின்பற்றப்பட்டிருக்வில்லை.

சுருக்கம் எழுதும் வினாவானது மௌனமாக வாசித்து, கிரகித்து, துலங்கலை எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டம் 6.1 உடன் தொடர்புடையது. சுருக்கம் எழுதும்போது அநேகமானவர்கள் சொந்த மொழிநடையில் எழுதுவதைத் தவறவிட்டிருந்தனர். இதனால் கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படாத அதேவேளை, பந்தியின் மையக் கருத்தையும், துணைக் கருத்துக்களையும் தெளிவாக வெளிப்படுத்துவதிலும் மாணவர்கள் இடர்ப்பட்டனர்.

வினா இல. 04 ஆனது தேரச்சி இல. 07 உடன் தொடர்புடைய கிரகித்தல் வினாவாகும். இரசனைக்காகவும், ஆக்கத்திறனை மேம்படுத்தும் வயிலும் வாசித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. தரப்பட்ட வினாவை முழுமையாக வாசித்து அணுகுவதில் மாணவர்கள் இடர்ப்பட்டுள்ளனர். ஆழ்ந்த கிரகித்தல் இன்மையால் சொற்களை இனங்காணத் தவறியுள்ளனர்.

நடைமுறை எழுதுதல் வினாவானது தேர்ச்சி இலக்கம் 09, 11 என்பவற்றுடன் தொடர்புடையது. இதன்மூலம் வாசித்து கிரகித்த விடயங்களை எழுதுவதும், நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவதும் எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைத் தேவைக்காக எழுதுதல் தொடர்பிலான வினாவில் கடிதம் / துண்டுப்பிரசுரத்தை எழுதுவதற்குப் பொருத்தமான கட்டமைப்பு பயன்படுத்தாமை மாணவர்களின் அடைவுமட்டம் குறைந்தமைக்கான காரணமாகும்.

தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து, சரியாக விளங்கி விடையெழுதுவதற்கும் தெளிவான கையெழுத்தில் சரியாகப் பந்திபிரித்து விடயங்களை எழுதுவதற்கும் சொந்த மொழிநடையைப் பயன்படுத்துவதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் இவ்வினாப்பத்திரத்துக்கான அடைவு மட்டத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

## 2.2.5.2 வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாக்களினதும் விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

**வினா இல. 1 உம் அதன் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) "உயர் குறிக்கோள், ஒருவர் உண்ணும் உணவினும் பருகும் நீரினும் அவருக்கு இனியது" - இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது ?

எழுவாய் – குறிக்கோள் / உயர் குறிக்கோள்

(ii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

இந்தப் புத்தகம் இங்கு எப்படி வந்தது என்றேன்

" இந்தப் புத்தகம் இங்கு எப்படி வந்தது? " என்றேன்.

(iii) "இளங்கோ அடிகள், தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் கூறியுள்ளார்." மேற்படி செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

இளங்கோ அடிகளால் தமிழர் தழுவிய பழக்க வழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் கூறப்பட்டுள்ளன./
தமிழர் தழுவிய பழக்க வழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் இளங்கோ அடிகளால் கூறப்பட்டுள்ளன.

(iv) 'சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை'
மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.

சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமானவை / அவசியமானவை ஆகும்.

(v) கம்பன் இராம கதையைக் காவியமாகப் பாடினான்.
அதனால் கவிச்சக்கரவர்த்தி என்ற புகழைப் பெற்றான்.
இவ்விரு வாக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களை ஒரே வாக்கியத்தில் அடக்கி எழுதுக.

கம்பன் இராம கதையைக் காவியமாகப் பாடி/பாடியதால்/பாடியமையால்/பாடியதனால் கவிச்சக்கரவர்த்தி என்ற புகழைப் பெற்றான்.

(vi) "படிக்காத அந்தப் பையன் பரிதாபமாக நின்றான்" - இவ்வாக்கியத்தில் காணப்படும் பெயரெச்சம் யாது ?

பெயரெச்சம் – படிக்காத

(vii) பின்வரும் சொற்றொடரைச் சந்திபிரித்து எழுதுக.

கூனலிளம்பிறை

கூனல் + இளம் + பிறை
கூனல் + இளமை + பிறை

(viii) "நாம் பல்லாற் கடித்த தடயங்கள்கூட இருக்கின்றன" - இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?

ஆல் உருபு

(ix) பின்வரும் வாக்கியத்திற் காணப்பெறும் திசைச்சொல் யாது ?

"நல்ல சினிமாவுக்கு சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு"

சினிமா

(x) "தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தது" - பேச்சு வழக்கில் உள்ள இந்த வாக்கியத்தை எழுத்து வழக்கில் திருத்தி எழுதுக.

தங்கை / தங்கைச்சி / தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித் திரிந்தாள்.

(02 x 10 = 20 புள்ளிகள்)

## 1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

**1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




வரைபு 7: (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

முதலாம் வினா கட்டாயம் விடையளிக்க வேண்டிய வினாவாகும். எனினும் இதற்கு 99% ஆனோரே விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்

00-05 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனோரும்
06-10 வரையான புள்ளி வீச்சில் 35% ஆனோரும்
11-15 வரையான புள்ளி வீச்சில் 31% ஆனோரும்
16-20 வரையான புள்ளி வீச்சில் 14% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 14% ஆனோர். 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 20% ஆனோர் 05 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**1 ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை**




வரைபு 8: (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

வினாப்பத்திரம் II இல் 10 குறுவினாக்கள் கொண்ட 1 ஆம் வினாவில் பிரிவு (v), (vii) ஆகியன இலகுதன்மை கூடியதாக அமைந்துள்ளன. இவற்றின் இலகுதன்மை 73% ஆகும். உபபிரிவு (iii) இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது. அதன் இலகுதன்மை 21% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை :**

- எழுவாயை இனங்காண்பதில் இடர்ப் பட்டமை.
- நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவற்றிற்குச் சரியாக விடை எழுதத் தவறியமை.
- செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுவதில் போதிய இலக்கண அறிவின்மை
- உடன்பாட்டு வாக்கியம் பற்றிய தெளிவின்மை
- பெயரெச்சம், திசைச்சொல் என்பனபற்றிய தெளிவின்மையால் சரியாக விடை எழுதத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- எழுவாய், பயனிலைகளை இனங்காண்பதற்குப் போதிய பயிற்சிகள் வழங்குதல்.
- நிறுத்தக் குறிகள்பற்றிய பயிற்சிகளை பாடப்பரப்பினூடாகவும் பயிற்சிகளினூடாகவும் விளக்குதல்.
- பெயரெச்சம், வினையெச்சம்பற்றிய பயிற்சிகளை நடைமுறை உதாரணங்கள் ஊடாக விளக்குதல்.
- அன்றாடம் மாணவர்கள் பேசும் சொற்களுள் திசைச்சொற்களையும் தொகுத்து எழுதச் செய்து போதிய பயிற்சிகளை வழங்குதல்.
- செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களில் மாற்றங்கள் இடம்பெறுகின்ற பொழுது அவற்றுள் இடம்பெறும் இலக்கண நுட்பங்களைப் போதிய உதாரணங்கள் மூலம் காட்டி விளக்குதல்.

**வினா இல.2**

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) ‘உலகின் நுரையீரல்’ எனப்படும் அமேசன் காடு அண்மைக்காலத்தில் பல தினங்களாகத் தொடர்ந்து எரிந்தது. அதனால் மரங்கள் ஏராளமாக அழிந்தன; வன விலங்குகள் மடிந்தன; சுற்றுச் சூழல் மாசடைந்தது. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இப்பாதிப்புகள் வனவளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு வன்மையாக உணர்த்தியுள்ளன. அவ்வகையில், வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம், பாதுகாக்கப்படாவிட்டால் ஏற்படும் தீமைகள் முதலானவற்றை விவரிக்கும் ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) அண்மையில் நீர் கலந்துகொண்ட கல்விச் சுற்றுலாவின்போது தரிசித்த இடங்கள், கவின்மிகு காட்சிகள், சந்தித்த சமூகத்தவர்கள், அவர்களோடு பேசிப் பழகிப் பெற்ற அனுபவங்கள் முதலானவை உமது கல்விக்கும் பொது அறிவுக்கும் உதவுவனவாக அமைந்தன. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதான ஒரு **விவரணக் கட்டுரை.**

(iii) சிறந்த ஆளுமை உடையவர்களாலேயே வாழ்க்கையில் உயர்நிலை அடைய முடியும். ஆளுமை என்பது பன்முகப்பட்ட ஆற்றல்களின் தொகுதியாகும். ஆதலால் ஒருவன் ஆளுமை உடையவனாய் இருப்பது அவன் பெற்ற கல்வித் தகைமைகளால் மாத்திரம் சாத்தியப்படாது. பாடவிதானத்துக்கு அப்பால் கலை, இலக்கியம், விளையாட்டு முதலான துறைகளிலும் பரிச்சயம் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதை உணராது ஏனைய விடயங்களில் ஈடுபடுவது படிப்பைப் பாழாக்கிவிடும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் அவ்வாறன்றி கல்வியிற் போலவே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதே உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) முயற்சி உடையவர்கள் ஒருபோதும் தாழ்ச்சி அடையமாட்டார்கள். ‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்’ என்பது பழமொழி. விடாமுயற்சியால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. ‘அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்’ என்ற பழமொழியும் அதைத்தான் வலியுறுத்துகிறது. அடிமட்டத்திலிருந்து தம் முயற்சியால் முன்னேறியவர்களின் அனுபவ மொழிகள் இவை. அவ்வாறாக தன் முயற்சியால் வாழ்வின் உச்சத்தைத் தொட்ட ஒருவரின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

## 2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் :

i.

தலைப்பு : வனவளம் காப்போம் / வனவளத்தின் முக்கியத்துவம் / வனவளம் அழிக்கப்படுவதால் உண்டாகும் தீமைகள் (இவை போன்றவை)

- மனிதர்கள் தமது குறுகிய தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றனர்.
  - பயிர் செய்தல்
  - குளங்களை அமைத்தல்
  - மரங்களை விற்பனை செய்தல்
  - விறகுத் தேவை

- காடுகளின் பயன்கள்
  - மனித சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசனை வழங்குதல்
  - உயிரினங்களின் புகலிடமாக அமைதல்
  - மழை வளம் தருதல்
  - வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துதல்
  - மண்ணரிப்பினைத் தடைசெய்தல்
- காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படுந் தீமைகள்
  - சுற்றுச்சூழல் மாசடைதல்
  - மழைவளம் இல்லாது போதல்
  - உயிரினங்கள் அழிந்து போதல்
  - நாட்டு வளமும் பொருளாதாரமும் குன்றிப் போதல்
- வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்

ii.

தலைப்பு : நான் சென்ற கல்விச் சுற்றுலா / கல்விச் சுற்றுலாவும் கற்ற பாடங்களும் (இவை போன்றவை)

- சென்ற இடம், காலம் பற்றிய தரவுகள்
- சுற்றுலா சென்றதற்கான நோக்கம்
- அழைத்துச் சென்றோர், உடன்வந்தோர் விபரங்கள்
- சுற்றுலாவின் போது பார்த்தவை
  - இடங்கள்
  - காட்சிகள்
- சுற்றுலாவின் போது சந்தித்தோர்
- இடங்களையும் மனிதர்களையும் சந்தித்துப் பெற்ற அனுபவங்கள் கல்விக்கும் பொது அறிவுக்கும் உதவுமாற்றை விவரித்தல்.
- பாட அலகுகளை விளங்கிக் கொள்ள சுற்றுலா எவ்வாறு உதவியது என விவரித்தல்.
- மேலும் சுற்றுலா செல்லும் விருப்பை வெளியிடல்.

iii.

தலைப்பு:

- படித்தால் மட்டும் போதுமா? / ஆளுமை விருத்திக்கு அவசியமானவை / கல்வியும் ஆளுமை விருத்தியு (இவை போன்றவை)

- இணைப்பாட விதானச் செயற்பாடுகள் படிப்பைப் பாழாக்கும் எனும் மாணவன் முன்வைக்கும் கருத்துகள்
  - அறிவு பெற உதவுகின்ற
  - தராதரம் உடையனவாக்குகின்ற
  - தொழில் சார்ந்த அறிவு தருகின்ற
  - விழுமியப் பண்புகளைத் தருகின்ற
  - ஆளுமை விருத்திக்கு உதவுகின்ற
  - கௌரவமான வாழ்க்கைக்கு அத்திவாரமாகின்ற
    கல்வியை
  - நேரவிரயம்
  - உடற்சோர்வு
  - கவனச் சிதறல்

முதலான காரணங்களால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாதிக்கின்றன.

- இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும் எனும் மாணவன் முன்வைக்கும் கருத்துகள்
  கல்வியோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுவது பின்வரும் நலன்களைத் தரும்
  - ஆளுமையை விருத்தி செய்வது
  - கூட்டுணர்வைத் தருவது
  - தலைமைதாங்கும் பண்பை வளர்ப்பது.
  - தொழில் வாய்ப்புக்கு அனுசரணையாக விளங்குவது
  - பரஸ்பரம் புரிந்துணர்வை வளர்ப்பது
    (இவை போன்றவை)
  - உரையாடலில் இருவர் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.
  - உரையாடல் அமைப்பில் இருத்தல் வேண்டும்.
  - ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கி தர்க்க ரீதியாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
  - உரையாடல் தொடர்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும்.

iv.

தலைப்பு:

- விடாமுயற்சி வெற்றி தரும் / முயற்சி திருவினையாக்கும் / முயன்றால் முன்னேறலாம் / முயன்றால் முடியாதது இல்லை.(இவை போன்றவை)

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்.
- வழங்கப்பட்ட கருப்பொளுக்கு அமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- கதையைச் சுவை படவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப் போக்கில் நகர்த்திச் செல்லுதல்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைப் பயன்படுத்துதல்.
- இயல்பான பாத்திர உரையாடலைக் கையாளுதல்.
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- முடிவு பொருத்தமாக அமைதல்.

**வினா இல. 02 புள்ளித்திட்டம்**

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

**2 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**

**2 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




2ஆம் வினா கட்டாய வினாவாகும். எனினும் 99% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

00-06 வரையான புள்ளி வீச்சில் 9% ஆனோரும்
07-12 வரையான புள்ளி வீச்சில் 23% ஆனோரும்
13-18 வரையான புள்ளி வீச்சில் 49% ஆனோரும்
19-25 வரையான புள்ளி வீச்சில் 19% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 19% ஆனோர் 19 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 9% ஆனோர் 6 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வரைபு 9 : (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**2 ஆம் வினாவின் தெரிவுகளுக்கான இலகுதன்மை**




வரைபு 10 : (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

வினாப்பத்திரம் II இல் 2 ஆம் வினா கட்டுரை வினாவாகும். இதில் வழங்கப்பட்டுள்ள 4 தெரிவுகளில் இலகுதன்மை கூடிய தெரிவு (i) விளக்கக் கட்டுரை வினாவாகும். இதன் இலகுதன்மை 47% ஆகும். அதேபோல் இலகுதன்மை குறைந்த தெரிவு (iii) உரையாடல் ஆகும். இதன் இலகுதன்மை 21% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- கட்டுரையில் கொடுக்கப்பட்ட வழிகாட்டற் குறிப்புகளை அவதானித்து கட்டுரை எழுதப்படவில்லை.
- மொழிச்செம்மை திருப்திகரமாக அமையவில்லை.
- பொருத்தமான இடங்களில் பழமொழிகள், உவமைகள், மரபுத்தொடர்கள், மேற்கோள் போன்றவற்றைக் கையாண்டு கட்டுரை எழுதப்படவில்லை.
- சொற்களின் எண்ணிக்கை கவனத்திற்கொள்ளப்படவில்லை.
- கட்டுரையமைப்பு முழுமையாகப் பேணப்படவில்லை.
- உரிய நிறுத்தக்குறிகள் இடப்படவில்லை.
- பந்திகள் ஆரம்பிக்கும் இடங்கள் ஒழுங்கற்று அமைந்திருந்தன.
- பந்திகளுக்கிடையில் இடைவெளிகள் விடப்பட்டிருந்தன.
- எழுத்துத்தெளிவு, நேர்த்தி என்பன திருப்திகரமாக அமையவில்லை.
- தலைப்புகள் வாக்கிய வடிவில் எழுதப்பட்டமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- வழிகாட்டற் குறிப்புக்களை வாசித்து விளங்கி அவற்றுக்கேற்றவாறு கட்டுரைகளை எழுத வழிப்படுத்தல்
- சட்டகம் அமைத்து கட்டுக்கோப்பாக அமையும் விதத்தில் எழுதப் பயிற்சி அளித்தல்.
- பந்தித்தொடர்பு, கட்டுரையமைப்பு என்பன தொடர்பாகப் போதிய பயிற்சி அளித்தல்.
- கட்டுரை எழுதும்போது பொருத்தமான பழமொழிகள், உவமைத்தொடர்கள், மேற்கோள்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுதுவதற்குப் பயிற்சிகள் வழங்கல்.
- தலைப்பு முற்று வாக்கியங்களாகவோ, வினா வாக்கியங்களாகவோ அமையக்கூடாது என்பதை வலியுறுத்துவதுடன் சுருக்கமாகவும், கவர்ச்சிகரமாகவும் எழுதுவதற்குப் பயிற்சிகள் வழங்குதல்.
- இலக்கண வழுவற்ற சிறிய வசனங்களை எழுதப் பழக்குதல்.
- சிறுகதை எழுதும்போது கதையாக எழுதாமல் சிறுகதை எழுதுவதற்குப் பயிற்சி வழங்குதல்.
- சிறுகதை எழுதும்போது குறைவான கதாபாத்திரங்கள், களம், கதையை நகர்த்த வேண்டிய பாங்கு என்பவற்றை சிந்தித்து திட்ட வரைபொன்றைத் தயாரித்த பின்னர் எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- வகுப்பறையில் கட்டுரைகள் எழுதுவதற்குப் பயிற்சி அளிப்பதுடன் மாணவர் எழுதிய மாதிரிக்கட்டுரை ஒன்றினைக் காட்சிப்படுத்தி அவற்றின் குறைநிறைகளை விமர்சிக்க வழிசெய்வதுடன் புள்ளியிடப்பட்டு புள்ளியிடலுக்கான காரணங்களையும் காட்சிப்படுத்தி சிறந்த கட்டுரைகளை எழுதப் பயிற்சி அளித்தல்.

**வினா இல.** 3

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

இன்றைய கால கட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கும், நெருங்கி விட்டமைக்கும் இத் தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகிவிட்டது எனலாம்.

பழமை மிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்), தொலைப் பதிவு (டெலக்ஸ்), மின்னஞ்சல் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்டபோதும், மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்தத் தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும், உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக்கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும், தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையோருடனோ இருக்கலாம்; நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி, வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம், தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

(10 புள்ளிகள்)

## 3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

சுருக்கம்

- இன்று தொடர்பாடல் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடு.
- முழு உலகுமே சுருங்கி நெருங்கியமைக்கு தொடர்பாடல் விருத்தியே காரணம்.
- பல்வேறு ஊடகங்கள் தோன்றியிருப்பினும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பு எல்லாவற்றிலும் மேலானது.
- வியத்தகு சாதனைகளைப் படைக்கும் மனிதன் தொடர்பாடலைப் பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு உறவாடும் தன்மைகளை வளர்த்தல் அவசியம்.
- எக்காலத்தும் எவ்விடத்தும் பல்வகைப்பட்டவர்களுடன் திறம்பட தொடர்பாடும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விடய உள்ளடக்கம் | - | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.

- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.

- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.

- சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.

**3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**

**3 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் இவ்வினாவுக்கு 98% ஆனவர்களே விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00-02 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 24% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 39% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 30% ஆக இருக்கும் அதேவேளை 7% ஆனோர் 02 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 11:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**3 ஆம் வினாவின் இலகுதன்மை**




**வரைபு 12** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் இலகுதன்மை 58% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- சுருக்கம் எழுதும்போது தவிர்க்கப்படவேண்டிய விடயங்கள்பற்றிய தெளிவின்மை அறிவின்மை.
- சொந்த மொழிநடையில் எழுதப்படாமை.
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படாமை.
- சொற்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட அளவை விட அதிகமாகக் காணப்பட்டமை அல்லது மிகக் குறைவாகக் காணப்பட்டமை.
- பந்தியில் உள்ள மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்காண முடியாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சுருக்கம் எழுதும்போது சொந்த மொழிநடையில் எழுதுவதற்கும் கருத்தமைவில் தொடர்ச்சியைப் பேணுவதற்கும் மாணவர்களுக்குப் போதிய பயிற்சிகளை வழங்குதல்.
- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் சொற்களை அமைத்து எழுதுவதற்கும் பந்திகளின் பிரதான கருத்து, துணைக்கருத்துக்களை இனங்காண்பதற்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- வகுப்பறையில் உரைப்பகுதியை மௌனமாக வாசித்து அதன் சுருக்கத்தை வாய்மொழியாகக் கூறுவதற்கு வழிகாட்டல்.
- சுருக்கத்தின்போது பந்தி பிரித்து எழுதுவது தவறு என்பதை வலியுறுத்தல்.

**வினா இலக்கம் 4**

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு 'ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அறிஞர் எழுதி வெளியிட்ட 'ஒரே உலகம்' (One World) என்னும் நூலை மக்கள் இனிதாக வரவேற்றனர். இந்நூற் கருத்தானது உலகம் தழுவியதாக இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஏனையோர்க்குப் பெரு மகிழ்வு அளித்தது. இதுபற்றி, தமிழராகிய நாம் சிறுபுன்முறுவல் அரும்பி நிற்கிறோம். ஏன் ? இருபது நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழறிஞர் இதனை இனிது உணர்ந்திருந்தனர். இதற்கு, 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' எனும் பாடல் இடம்பெறும் புறநானூறு தக்க சான்றாகும். இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது ? பிறநாட்டினருடனான வணிகத்தின் பயனாகவும், மூவேந்தருடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பின் பயனாகவுமே பழந்தமிழர்க்கு இப்பரந்த மனப்பான்மை வாய்த்ததெனலாம்.

மேலே எடுத்துக்காட்டிய ஓருலக மனப்பான்மையும், அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும் மற்றொரு சிறந்த பண்புக்குக் காரணமாயின. இது கண்ணோட்டம் எனப்படும். இதனைப் பொறை எனலும் பொருந்தும். தமிழ்மொழி வரலாறு, நம் மக்களின் ஒப்பற்ற சமயப் பொறைக்குச் சான்றாக அமைந்துள்ளது. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழி. சமஸ்கிருதம் இந்தியச் சமயங்களின் மொழி. ஆனால், பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு.

(i) 'ஒன்றே உலகம்' எனும் மனப்பான்மையைத் தமிழர் பழங்காலத்திலேயே பெற்றிருந்தமைக்கு ஆதாரமாக அமைந்த நூல் யாது ?

(ii) இம்மனப்பான்மையை, பழந்தமிழர் பெற்றுக்கொண்டமைக்கான காரணங்களாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் கருதுகிறார் ?

(iii) பொறை எனும் பண்புக்கு அடிப்படைகளாக அமைந்தவை எவை ?

(iv) பிறமொழிகளோடு ஒப்பிட்டு, தமிழ்மொழியின் எச்சிறப்பை ஆசிரியர் பாராட்டுகின்றார் ?

(v) தமிழரிடம் சிறுநகை தோன்றுவதற்கான காரணம் யாது ?

### 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

i. புறநானூறு

ii. பிற நாட்டினருடனான வணிகம்
மூவேந்தர்களுடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பு

iii. ஒருலக மனப்பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும்

iv. பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு

v. இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்க அறிஞர் வெளியிட்ட உலகம் தழுவியதான கருத்தினை, இருபத நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழறிஞர் கூறிவிட்டனர் என்ற நினைப்பு.

(02 x 05 = 10 புள்ளிகள்)

### 4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :




வரைபு 13: (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00-02 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 26% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 19% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 19% ஆக இருக்கும் அதேவேளை 25% ஆனோர் 02 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




வரைபு 14 : (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

4 ஆம் வினா ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் பிரிவு (ii) இன் இலகுதன்மை 68% ஆக உள்ளதுடன் மற்றைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது பிரிவுகள் (i), (v) ஆகியவற்றின் இலகுதன்மைகள் முறையே 35%, 28% என்றவாறு சற்று குறைவாகவே காணப்படுகின்றன.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- தரப்பட்ட உரைப்பகுதியை முழுமையாக வாசித்து, கிரகித்து பிரிவுகள் (i), (v) ஆகியவற்றுக்கு சரியாக விடையளிக்கத் தவறியமை.
- வினா பிரிவு (i) சரியான விடையை இனங்காண்பதில் ஆழ்ந்த கிரகித்தல் அறிவின்மை.
- வினா பிரிவு (iii) வினாவை சரியாக விளங்கிக்கொள்ளத் தவறியமை.
- வினா பிரிவு (v) சிறுநகை, சிறுபுன்முறுவல் ஆகியன ஒத்த கருத்துகளைக் கொண்டுள்ளன என்பதை உணரத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பொருத்தமான உரைநடைப் பகுதிகளைத் தெரிவுசெய்து வினாக்களை வழங்கி விடையெழுதச் செய்வதனூடாக கிரகிக்கும் திறனை விருத்தி செய்தல்.
- நேரடியான விடைகளை இனங்காணுவதற்கான பயிற்சிகளை வழங்குவதனைத் தவிர்த்து, மாணவர்கள் சிந்தித்துக் கிரகித்து விடையளிப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்.

**வினா இல. 5**

**5.** பொன்னகரம் பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானமானது நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ளது. இதனால் இளைஞர்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அப்பிரதேச இளைஞர் மன்றத்தின் செயலாளர் க. தேவகுமாரன் என உங்களைக் கருதிக்கொண்டு, மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, பொன்னகர பிரதேச செயலாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

- ✳ மைதானத்தின் தற்போதைய நிலை
- ✳ அதனால் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு
- ✳ புனரமைப்பதால் ஏற்படும் நன்மைகள்

**அல்லது**

இலாபமீட்டுதலைக் கருதி விவசாயத்துறையில் இரசாயன உரங்களின் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் நாம் உண்ணும் உணவில் நச்சுத்தன்மை மிகுந்துள்ளது. இவ்வுணவுப் பாவனையால் புற்றுநோய் முதலிய கொடுநோய்கள் மனித சமுதாயத்தில் பெருகிவருகின்றன. எனவே, இவற்றிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கு மீண்டும் இயற்கை உணவை நோக்கிச் செல்லுவதன் தேவையை வலியுறுத்தி, அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சோழியபுரம் இளம் விஞ்ஞானிகள் சங்கத்தின் சார்பில் **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

## 5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**கடிதம**

| | | |
|---|---|---|
| – அமைப்பு | – | 05 புள்ளிகள் |
| – உள்ளடக்கம் | – | 07 புள்ளிகள் |
| – மொழிநடை | – | 03 புள்ளிகள் |
| **மொத்தம்** | – | **15 புள்ளிகள்** |

- ◆ அமைப்பு

| | | |
|---|---|---|
| – முகவரி | – | 01 புள்ளி |
| – உள்முகவரி | – | 01 புள்ளி |
| – விளிப்பு | – | 01 புள்ளி |
| – தலைப்பு | – | 01 புள்ளி |
| – பதவி, ஒப்பம் | – | 01 புள்ளி |
| | | 05 புள்ளிகள் |

(தரப்பட்ட தரவுகளுக்கு அமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்)

- உள்ளடக்கம்

  விளையாட்டு மைதானத்தின் தற்போதைய நிலை
  - மழைக் காலத்தில் நீர் தேங்கி நிற்றல் முதலானவை.
  - புற்கள், செடிகொடிகள் நிறைந்திருத்தல்.
  - கால் நடைகளின் உறைவிடமாகக் காணப்படல்.
  - பார்வையாளர் பகுதி பராமரிப்பின்றி சேதமடைந்து காணப்படல்.
  - கழிவுகள் வீசும் இடமாக மாறி வருதல்.

  (இவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ பொருத்தமான வகையில் எழுதுதல்)

  இளைஞர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு
  - பல்வேறு வகையான விளையாட்டுக்களில் பயிற்சி பெற முடியாதிருத்தல்.
  - தேசிய மட்டம், சர்வதேச மட்டப் போட்டிகளுக்குச் செல்வதில் தடைகள் ஏற்படல்.
  - இளைஞர்களின் இளமைத்துடிப்பும், உணர்வும் மழுங்கடிக்கப்படல்.
    (இவை போன்றன)

புனரமைப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள்
- பயிற்சி பெற வாய்ப்பேற்படுதல்.
- திறமையானவர்கள் வெளிக் கொணரப்படல்.
- இளைஞர்கள் உடல், உள ரீதியாக உற்சாகம் அடைதல்.
- வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வளர்தல்.
- கூட்டுணர்வு ஏற்படல்.
- தேசிய மட்டம், சர்வதேச மட்டப் போட்டிகளுக்குச் செல்லல்.

- மொழிநடை
  - பொருத்தமான மொழிநடை
  - நிறுத்தக் குறிப்பிரயோகம்
  - வழுக்கள் இன்மை
  - சுட்டிப்பாகக் கூறுதல்

(15 புள்ளிகள்)

அல்லது

**துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| - அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| - உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| - மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| **மொத்தம்** | **-** | **15 புள்ளிகள்** |

- அமைப்பு

| | | |
|---|---|---|
| - கவர்ச்சிகரமான தலைப்பு | - | 02 புள்ளிகள் |
| - விளிப்பு | - | 01 புள்ளி |
| - வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | - | 02 புள்ளிகள் |
| | **-** | **05 புள்ளிகள்** |

(தரப்பட்ட தகவல்களுக்கு அமைய வெளியிடுபவர் விபரம் அமைதல் வேண்டும்)

- உள்ளடக்கம்
  - விவசாயத்துறை தற்போது இலாபநோக்கம் கருதிய துறையாக மாறி விட்டிருத்தல்.
  - உரப்பாவனை அதிகரித்துக் காணப்படல்.
  - உணவில் நச்சுத்தன்மை அதிகரித்திருத்தல்.
  - புற்று நோய் முதலியவை ஏற்பட்டுப் பெருகி வருதல்.
  - இயற்கை உணவை உண்பதை வலியுறுத்தல்.
  - மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

- மொழிநடை
  - கவர்ச்சியான மொழி நடை.
  - பொதுமக்களை விளித்து எழுதுதல்.
  - சூழ்நிலையின் அபாயத்தை வெளிப்படுத்தல்.
  - சொற்செறிவு.

(15 புள்ளிகள்)

**5ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**5 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இவ்வினாவும் கட்டாய வினாவாக இருந்தபோதிலும் 95% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்
00-03 வரையான புள்ளி வீச்சில் 8% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 45% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 27% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 12 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் 27% ஆக இருக்கும் அதேவேளை 8% ஆனோர் 03 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 15** : (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**5 ஆம் வினாவின் தெரிவுகளுக்கான இலகுதன்மை**




**வரைபு 16:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

5 ஆம் வினா இரண்டு தெரிவுகளைக் கொண்டது. இவற்றுள் முதலாவது தெரிவான 'கடிதம் எழுதுதல்' இலகுதன்மை கூடியதாகவும் (51%) இரண்டாவது தெரிவான 'துண்டுப்பிரசுரம் எழுதுதல்' இலகுதன்மை குறைந்ததாகவும் (33%) காணப்படுகின்றது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- **கடிதம்**
  - முகவரியை எழுதும்போது திகதி, தமது பெயர், பதவி என்பவற்றைக் குறிப்பிடத் தவறியமை.
  - உள் முகவரியை எழுதும்போது தரப்பட்ட விடைக்குறிப்புக்களைப் பயன்படுத்தாது யாருக்குக் கடிதம் எழுதுகின்றோம் என்ற தெளிவின்மையுடன் எழுதியமை.
  - விளிப்புக்குப் பின்னரே தலைப்பு இடவேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ளாமை.
  - கடித முடிப்பில் ஒப்பந்தத்தின் கீழ் பதவி இடம்பெறவேண்டும் (பதவி அல்லது பெயர் முகவரியில் அல்லது முடிப்பில் இடம்பெற வேண்டும்.)
  - சொல்லளவு குறைவாகக் காணப்பட்டமை.
- **துண்டுப்பிரசுரம்**
  - துண்டுப்பிரசுரத்தின் அமைப்பில் தலைப்பு, விளிப்பு, வெளியிடுவோர் விபரம், திகதி என்பன சரியாக எழுதப்படவில்லை.
  - வழிகாட்டற் குறிப்பிலுள்ள விடயங்களைப் பின்பற்றாமை.
  - கூற வேண்டிய விடயத்தை தெளிவாகவும் சுருக்கமாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுதாமை.

**அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- **கடிதம்**
  - கடிதச் சட்டக மாதிரியை முன்வைத்து விளக்கமளித்தல்.
  - தொழின்முறைக் கடிதத்தில் உள்முகவரியை எழுதுவதற்கும் பொருத்தமான தலைப்பிடுவதற்கும் பயிற்சியளித்தல்.
  - கடித உள்ளடக்கத்திற்கும் வினாவிற்கும் இடையே உள்ள பொருத்தப்பாட்டினை விளக்குதல்.
  - கடித உள்ளடக்கத்தில் கருத்துகள் ஒழுங்கமைக்கப்பட்டவையாகவும், பிரச்சினைகளைத் தெளிவாகப் புலப்படுத்துவனவாகவும் பிரச்சினைகளுக்கான தீர்வை விநயமாக வேண்டுவனவாகவும் அமையும் வகையில் மாதிரிக் கடிதங்களைக் காண்பித்து அவற்றை எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- **துண்டுப்பிரசுரம்**
  - துண்டுப்பிரசுரத்தின் அமைப்பை, மாதிரி துண்டுப்பிரசுரம் ஒன்றைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
  - துண்டுப்பிரசுரத்திற்கான வழிகாட்டற் குறிப்புகளை வழங்கி அவற்றிற்குப் பொருத்தமான தலைப்பு, விளிப்பு என்பன தொடர்பாக வழிகாட்டல்.
  - துண்டுப்பிரசுரத்தை எழுதும்போது கவனிக்கவேண்டிய விடயங்களை வலியுறுத்திக் கூறி எழுதுவதற்குப் பயிற்சி அளிப்பதுடன் அவற்றிற்குரிய புள்ளிகளை வழங்கி வழிகாட்டல்.
  - பொதுமக்கள் விளங்கிக்கொள்ளும் விதத்திலான சிறிய வாக்கியங்களை எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
  - நீண்ட வசனங்களாக இல்லாதிருத்தல்.
  - வாசிப்போரை கவரக்கூடியதாக இருத்தல்.
  - பொருத்தமான ஆரம்பமும் முடிவும் காணப்படல்.
  - உள்ளடக்கத்தை வாசிக்கத்தூண்டும் கவர்ச்சியான தலைப்பு அமைதல்.
  - ஆவலைத் தூண்டும் வகையிலான உத்திகளைப் பயன்படுத்தல்.

    (படங்களை வரைவதைத் தவிர்த்துக்கொள்ளவும்)

### 2.2.5.3 வினாப்பத்திரம் II இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள்

- இரண்டாம் வினா கட்டுரை எழுதுவது தொடர்பானதாகும். மாணவர்கள் கொடுக்கப்பட்ட நான்கு கட்டுரைகளின் வழிகாட்டற் குறிப்புகளையும் நன்கு வாசித்து தமக்கு எழுதுவதற்கு வாய்ப்பான விடயத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்.

- கட்டுரை எழுதும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு எழுதுவதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.
  - பொருள் அமைவும் அளவும்
  - கருத்து வெளிப்பாடும் அளவும்
  - எழுத்து நுட்பங்கள் (பந்தி அமைப்பு, பந்திகளிடையேயான தர்க்கரீதியான தொடர்ச்சி, குறியீடுகள், உறுப்பமைவு, நேர்த்தி)
  - பொருத்தமான தலையங்கம்
    (குறைந்த சொற்களைக் கொண்ட கவர்ச்சியான தலைப்பு)

- சுருக்கம் எழுதும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வகுப்பறைப் பயிற்சிகள்மூலம் தெளிவுபடுத்த வேண்டும்.
  - பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் இனங்காணப்படல்.
  - சொந்த மொழிநடையில் எழுதுதல்.
  - பிரதான அம்சங்களை அனுசரித்து கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
  - ஒரு பந்தியாக எழுதுதல்.
  - குறித்த சொல்லளவில் எழுதுதல்.
  - தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல்.

- கிரகித்தல் வினாவிற்கு விடையளிக்கும்போது கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியை நன்கு வாசித்து கிரகித்து மிகச்சரியான விடையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சுட்டிப்பாகவும் எழுத வேண்டும்.

- புதிய பந்திகள் ,பாடல்களை வகுப்பறையில் வழங்கி கிரகித்தல் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

- 5 ஆம் வினாவில் இரு தெரிவு வினாக்கள் வழங்கப்படும். மாணவர்கள் இரு வினாக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து எழுத வேண்டும். தமக்கு மிகப் பரிச்சயமான விடயத்தை தெரிவுசெய்து எழுதுதல் நன்று.
  கடிதம், அறிக்கை, துண்டுப்பிரசுரம், விளம்பரம் ஆகியவற்றை எழுதுவதற்கான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

- அவதானிக்க வேண்டிய விடயங்களை அனுசரித்து எழுதுவதற்குப் பயிற்சியளித்தல் வேண்டும்.
  - அமைப்பு
  - பொருட் பொருத்தம்
  - மொழிநடை

- மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கற்று, அவற்றைப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

- விடயங்களை நேர்த்தியாக ஒழுங்கமைத்து முன்வைப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்.

- மொழி கற்றல் - கற்பித்தலின்போது அடிப்படைத்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் தேர்ச்சி பெறும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

- கட்டுரைகள், சிறுகதைகள், கடிதங்கள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் போன்றவற்றின் மாதிரிகளைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

## 2.3. வினாப்பத்திரம் III இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.3.1 வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு

**நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம் :- 80 புள்ளிகள்**

(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடநூல்)

(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவுசெய்தல் வேண்டும்.)

1. குறுவிடை வினாக்கள் 10 ஆகும்.
   (ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த ஐந்து உப பகுதிகள் ஆகும்.
   (ஒரு உப பகுதிக்கு 4 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
3. விருப்பு வினாக்கள் 02 ஆகும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
4. விருப்பு வினாக்கள் 02 ஆகும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (10 புள்ளிகள்)

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+20+15+15+10**
**= 80 புள்ளிகள்**

### 2.3.2 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்




இவ்வினாப்பத்திரத்தின் முதல் நான்கு வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானது. எனினும் வரைபின் அடிப்படையில் முதலாம் வினாவுக்கும் இரண்டாம் வினாவுக்கு 99% ஆனோரும், மூன்றாம் வினாவுக்கு 95% ஆனோரும் நான்காம் வினாவுக்கு 96% ஆனோருமே விடையளித்துள்ளனர்.

5,6,7 ஆகிய வினாக்கள் தெரிவு வினாக்களாகும். இவற்றுள் 5ஆம் வினாவை 41% ஆனோரும், 6 ஆம் வினாவை 10% ஆனோரும் 7 ஆம் வினாவை 44% ஆனோரும் தெரிவுசெய்துள்ளனர்.

**வரைபு 17** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 2.3.3 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு

**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2019**
**22 - தமிழ்மொழியும் இலக்கியமும் - வினாப்பத்திரம் III**
**ஒவ்வொரு வினாவிலும் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுச்சுட்டி**




**வரைபு** 18 (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

மேலுள்ள வரைபின் அடிப்படையில் வினாப்பத்திரம் III இல் இலகுதன்மை கூடிய வினா, வினா இலக்கம் 1 இன் உப பிரிவு (ii) (ஆ) ஆகும். இதன் இலகுதன்மை 85% ஆகும். அதேபோல இலகுதன்மை குறைந்த வினா, வினா இலக்கம் 2 இன் உபபிரிவு (v) (ஆ) ஆகும். அதன் இலகுதன்மை 11% ஆகும்.

### 2.3.4 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




**வரைபு 19** - (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -

முதலாம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இப்புள்ளிகளில் 00% - 25% வீச்சில் அதாவது 0-5 புள்ளிகளை 26% ஆனோர் பெற்றுள்ளனர். அதேபோன்று 26%-50% வீச்சில், அதாவது 6-10 புள்ளிகளை 37% ஆனோரும், 51% - 75% வீச்சில், அதாவது 11-15 புள்ளிகளை 28% ஆனோரும் 76%-100% வீச்சில், அதாவது 16-20 புள்ளிகளை 9% ஆனோரும் பெற்றுள்ளனர்.

6 ஆம் வினாவில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் மிகக் குறைவான புள்ளி வீச்சைக் காட்டுகின்றது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 10 இல் 54% ஆனவர்கள் 02 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

## 2.3.5 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வு

### 2.3.5.1 வினாபத்திரம் III இன் பகுப்பாய்வுச் சுருக்கம்

வினாப்பத்திரம் III மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடநூலின் அடிப்படையிலான இலக்கிய அறிவைப் பரீட்சித்தலை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வினாப்பத்திரம் கட்டாய வினாக்களையும் தெரிவு வினாக்களையும் கொண்டது.

வினாப்பத்தரம் III ஆனது தேரச்சி மட்டங்கள் 1.3, 2.1, 7.1, 12.2 என்பவற்றோடு தொடர்புடையது. இதன்மூலம் முறையே கேட்டுக் கிரகித்தவற்றை செம்மையாக கூறுதல், தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாக புலப்படும் வகையில் உரையாடுதல், படைப்புகளை நயந்து வாசித்தல், சொற்றொடர்களையும் அவற்றின் பொருளையும் வகையையும் செம்மையாக அறிந்து பிரயோகித்தல் என்பவற்றுக்கான அடைவுமட்டங்கள் பரீட்சிக்கப்படுகின்றன.

இலக்கிய பாடத்தோடு தொடர்புடைய குறு வினாக்களுக்கும், செய்யுட் பகுதிகள் மற்றும் உரைநடைப் பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கும் சரியாக விடையளிப்பதில் மாணவர்கள் இடர்ப்பட்டுள்ளனர். அணிப்பிரயோகங்களில் காணப்படும் தெளிவின்மை, அருஞ்சொற்றொடர்கள்பற்றிய விளக்கமின்மை, பாடல்களையோ கவிதைகளையோ பொருள்பட விளங்கி வாசித்து அறிந்துகொள்ளும் தன்மை காணப்படாமை என்பன இவற்றுக்கான பிரதான காரணங்களாக அறியப்படுகின்றன.

மேலும், விளக்க வினாக்களுக்கு விடையளிக்கும்போது மாணவர்கள் வினாக்களுக்குப் பொருத்தமான கட்டமைப்பைப் பின்பற்றி விடையெழுதத் தவறியுள்ளனர். இலக்கியச் சுவை புலப்படும் வகையில் விடைகளை நயந்து எழுதாமல் சிறுகுறிப்புகளாக எழுதியுள்ளனர். வினாவுக்குப் பொருத்தமான முறையில் செய்யுட் பகுதிகளையோ, கட்டுரை, சிறுகதைப் பகுதிகளையோ மேற்கோள்காட்டி விளக்கி எழுதத் தவறியுள்ளனர்.

இலக்கியப் பாடப்பரப்புக்கான அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டும். இலக்கியப் பாடத்தில் மாணவர்கள் செய்யுட் பகுதிகள், உரைநடைப்பகுதிகள் என்பவற்றில் சொற்களின் பொருள்களை விளக்கிக்கொள்ளச் செய்யும் வகையிலும், செய்யுட் பகுதிகளில் சொற்களின் கருத்துகளையும் பாடல்களைச் சந்திபிரித்து பொருள்களை விளங்கிக்கொள்ளச்செய்யும் வகையிலும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இலக்கிய உரைநடைப் பகுதிகளை இலக்கிய இரசனையுடன் கற்பித்தல் வேண்டும்.

## 2.3.5.2 வினாப்பத்திரம் III இன் ஒவ்வொரு வினாக்களிலும் விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

**வினா இல. 1**

சுருக்கமான விடை தருக.

(i) "கணக்காயரில்லாதவூரும் பிணக்கறுக்கு மூத்தோரையில்லா வவைக் களனும்"

(அ) இங்கே 'மூத்தோர்' என்போர் யார் ?

(ஆ) 'அவைக்களன்' என்பதன் பொருள் யாது ?

(ii) "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்" - இங்கு

(அ) வானரம் என்பது யாது ?

(ஆ) மந்தி என்பது யாது ?

(iii) "இன்பப்பயன் காணச் செய்கின்ற இலட்சியம், சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது."

(அ) இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது ?

(ஆ) இங்கு உடலாகவும் உயிராகவும் கருதப்படுபவை யாவை ?

(iv) "மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே"

(அ) 'வங்கிசம்' என்பது எதனைக் குறிக்கிறது ?

(ஆ) 'கிராம்பே' என்பதை எழுத்து வழக்கில் தருக.

(v) "கொற்றத்தார்க் குரிசில் இவர் யார் ?"

(அ) இவ்வாறு வினவியவர் யார் ?

(ஆ) 'கொற்றத்தார்க் குரிசில்' எனக் குறிப்பிடப்படுபவர் யார் ?

(vi) "திணிமணற் செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇ"

(அ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டு யாது ?

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் பாவை எதனால் ஆக்கப்படுகிறது ?

(vii) "அங்கப்பாரு மனே உன்ட மூத்த வாப்பா தலய, சூப்பின பனங்கொட்ட மாதிரி"

(அ) 'மூத்த வாப்பா' எனக் குறிக்கும் உறவுப் பெயருக்குச் சமனான வேறு பெயர் யாது ?

(ஆ) இதில் இடம்பெற்ற அணி யாது ?

(viii) "நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம்"

(அ) இங்கு களங்கமின்மையை உணர்த்தும் சொல் யாது ?

(ஆ) 'துணைவியர்கள்' என்று குறிப்பிடப்படுபவை யாவை ?

(ix) "நண்பர் 486 கம்பியூட்டர், 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்"

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரபந்தம் யாது ?

(ஆ) உச்சாடனம் செய்தல் என்பதன்மூலம் உணர்த்தப்படுவது யாது ?

(x) "முந்து ஊர் வெம் பணிக்கொடியோன் மூதூரில்"

(அ) இங்கு 'பணிக்கொடி' என்பது எதனைக் குறிக்கிறது ?

(ஆ) இங்கு 'மூதூர்' எனக் குறிப்பிடப்படுவது யாது ?

1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

01. சுருக்கமான விடை தருக.

i. அ. அறிவுடையோர் / அறிவும் அனுபவமும் உடையோர் / அறிஞர்
ஆ. சபை / சபை கூடும் இடம் / அவை

ii. அ. ஆண் குரங்கு
ஆ. பெண் குரங்கு

iii. அ. உருவக அணி
ஆ. 1. சமூகம்
2. இலட்சியம்

iv. அ. பரம்பரை / வம்சம் / குடும்பம்
ஆ. கராம்பு/ கிராம்பு

v. அ. குகன்
ஆ. பரதன்

vi. அ. பாவை விளையாட்டு / வண்டற்பாவை விளையாட்டு
ஆ. மணல் / மண் / வண்டல்

vii. அ. பாட்டன் / தாத்தா / பேரன்
ஆ. உவமையணி

viii. அ. நிர்மலம்
ஆ. நட்சத்திரங்கள்

ix. அ. பரணி
ஆ. மீண்டும் மீண்டும் கூறல்
தொடர்ந்து கூறல்

x. அ. பாம்புக் கொடி
ஆ. அஸ்தினாபுரம் / குருநாடு

## 1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

**1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




1ஆம் வினா கட்டாய வினாவாகும். எனினும் இதற்கு 99% ஆனோரே விடையளித்திருந்தனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,
00-05 வரையான புள்ளி வீச்சில் 26% ஆனோரும்
06-10 வரையான புள்ளி வீச்சில் 37% ஆனோரும்
11-15 வரையான புள்ளி வீச்சில் 28% ஆனோரும்
16-20 வரையான புள்ளி வீச்சில் 9% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 9% ஆனோர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 26% ஆனோர் 05 அல்லது அதற்குக் குறைவான புள்ளி-களையே பெற்றுள்ளனர்.

**வரைபு 20:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**1 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை**




**வரைபு 21:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வினா இரண்டு உபபிரிவுகளைக் கொண்ட 10 குறுவினாக்களைக் கொண்டது. அவற்றுள் இலகுதன்மை குறைந்த வினாக்களாக (i) (அ), (iii) (ஆ), (v) (ஆ), (vi) (அ), (viii) (அ), (ஆ), (ix) (அ), (ஆ) (x) (அ), (ஆ) ஆகியன அமைந்துள்ளன. இவற்றின் இலகுதன்மை 40% இலும் குறைவாகும். இலகுதன்மை கூடிய வினாக்களாக (i) (ஆ), (ii) (ஆ), (vi) (ஆ) ஆகியன அமைந்துள்ளன. இவற்றில் வினா (ii) (ஆ) பிரிவுக்கு 85% ஆன பரீட்சார்த்திகளும், வினா (vi) (ஆ) பிரிவுக்கு 75% ஆன பரீட்சார்த்திகளும் (i) (ஆ) பிரிவுக்கு 72% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- "மூத்தோர்" என்ற சொல்லின் பொருளை சரியாக விளங்கிக்கொள்ளாமை.
- உருவக அணிபற்றிய விளக்கமின்மை.
- வினா இலக்கம் (v) இலக்கியப்பகுதிகளில் வரும் கதாபாத்திரங்களை அடையாளம் காணமுடியாமை. (யாரால் யாருக்கு கூறப்பட்டமை)
- வினா இலக்கம் ix - (அ), (ஆ) பரணி, உச்சாடனம் ஆகிய சொற்பதங்களின் பொருள் விளக்கமின்மை

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பாடலையோ, கவிதையையோ கற்பிக்கும்போது பாடலின் பொருள், அதன் புலப்பாட்டுத்தன்மை, சொற்கள் இடம்பெற்ற சந்தர்ப்பம், அணிகள் என்பவற்றை எடுத்துக்காட்டுதல்.
- பாடலின் பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாளுதல்.
- பாடல்களில் இடம்பெறும் பிரதான சொற்கள், சொற்றொடர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்.

**வினா இல. 2**

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

(அ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதுமொழி வலியுறுத்தும் உண்மை யாது ?

(ஆ) அதை வலியுறுத்துவதற்கு கவிஞர் தரும் எடுத்துக்காட்டுகள் யாவை ?

(ii) கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

(அ) காளமேகப் புலவரது கவிபாடும் திறம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

(ஆ) 'நன்னூலாங் கடலினுண்டு' என்ற தொடரில் பயின்றுள்ள அணியை விளக்குக.

(iii) முழங்கு திரைப் புனலருவி கழங்கெனமுத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம் பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

(அ) குற்றால மலையின் நீர்வளம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது ?

(ஆ) 'தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்' - என்பதனூடாக உணர்த்தப்படுவது யாது

(iv) பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்தச்சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள். தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. "ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்" என்றார் நாவலர் அவர்கள்.

(அ) அங்கு நிலவிய அமைதி கட்டுரையாசிரியரால் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

(ஆ) நாவலரது தன்னம்பிக்கை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

(v) அன்றிலிருந்து புகையிலைக்கன்றுக்குப் பாத்தி கட்டுவதுபோல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புகளை இந்த வரப்புக்குள் வைத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் எனக்குக் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது.

(அ) கம்பியூட்டரை இலகுவாகப் பயன்படுத்துவதற்குத் தான் கையாண்ட உத்தியை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் ?

(ஆ) 'சூட்சுமத்தையெல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது' எனும் வாக்கியத்தால் விளங்கிக்கொள்ளக்கூடியது யாது ?

(20 புள்ளிகள்)

**2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

i. அ. மன நிறைவு / மனத்திருப்தி / திருப்தி

ஆ. 1. உப்பில்லாக் கஞ்சியை அறுசுவை போல உண்ணல்.
2. தப்பிய கந்தையை பட்டாடை போல அணிதல்.
3. பனையோலைப் பாயினை மேலான படுக்கையாக எண்ணி உறங்குதல்.

ii. அ. கழிக்க வேண்டிய பிழையான பொருள்களை விலக்கி, நல்ல நூல்களாகிய கடலிலிருந்து பெறத்தக்கவற்றை பெற்று, தமிழுக்கு இருப்பிடமான பொதிகை மலையிலே நிலைகொண்டு அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்கள் பயப்படும்படியாக ஆரவாரத்தோடு எந்த நேரத்திலும் கவிதை மழை பொழிபவர்.

ஆ. உருவக அணி
நல்ல நூல்கள் கடலாக உருவகிக்கப்பட்டுள்ளன.

iii. அ. – முழக்கமிடும் அலைகளையுடைய அருவியானது கழங்கு விளையாடுவது போல முத்துக்களை வாரிக் கொண்டு செல்லுதல்
– அருவி நீர் பெருகி குறவர் இல்லங்களின் முற்றம் தோறும், பரந்து, பெண்கள் மண்ணினால் செய்த சிறு வீடுகளை அடித்துச் செல்லுதல்

ஆ. மலையினுடைய உயர்ச்சி / சண்பக மலர் வாசனையின் சிறப்பு

iv. அ. – பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' என்பதன் மூலம்
– பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை என்பதன் மூலம்

ஆ. "ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் " என நாவலர் கூறியதனூடாக

V. அ. புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து படைப்புகளை எல்லைப்படுத்தி வைத்துக் கொண்டோம் என்பதினூடாக

ஆ. கம்பியூட்டர் பற்றிய தொழில்நுட்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிச்சயமாதல்

(4 x 5 = 20 புள்ளிகள்)

**2 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

**2 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




2 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 99% ஆனோரே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் 20 ஆகும். இதில்

00-05 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்

06-10 வரையான புள்ளி வீச்சில் 35% ஆனோரும்

11-15 வரையான புள்ளி வீச்சில் 28% ஆனோரும்

16-20 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 7% ஆனோர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 30% ஆனோர் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 22:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**2 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உப பிரிவுகளுக்குமான இலகுதன்மை**




**வரைபு 23:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

2 ஆம் வினா 5 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் உப பிரிவுகள் (i) (ஆ), (iv) (ஆ), (v) (அ) ஆகியன 60% ஐக் காட்டிலும் அதிக இலகுதன்மை கொண்ட வினாக்களாகவும், உப பிரிவுகள் (i) (அ), (ii) (அ), (ஆ), (iii) (அ), (v) (ஆ) ஆகியன 40% ஐ விடக் குறைந்த இலகுதன்மை கொண்ட வினாக்களாகவும் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- செய்யுட்பகுதிகளுக்கு விடையளிக்கும்போது பொருத்தமான சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தத் தவறியமை (உ.ம்: மனத்திருப்தி / மனநிறைவு).
- அணிகளை இனங்காண்பதற்கும் விளக்கி எழுதுவதற்கும் இடர்ப்பட்டுள்ளமை.
- கொடுக்கப்பட்ட செய்யுள்பகுதிகள், உரைப்பகுதிகளை நன்கு விளங்கிப் பொருத்தமாக விடையளிக்கத் தவறியமை. ஒரே விடைகளை இரு உப பிரிவுகளிலும் எழுதியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- செய்யுட்பகுதிகள், உரைநடைப்பகுதிகளைக் கற்பிக்கும்போது வினாக்களுக்குப் பொருத்தமான உப பிரிவுகளுக்குரிய வகையில் விடைகளை எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.
- பாடல்களின் பொருளை இலகுவாக அறிந்து கொள்வதற்கு சந்திபிரித்து கொண்டு கூட்டி வாசித்து அருஞ்சொற்களின் பொருளை விளக்கி அணிகள் தொடர்பான எளிமையான விளக்கங்களைக் கொடுத்தல்.
- உரைநடைப் பகுதிகளைக் கற்பிக்கும் போது அவற்றில் இடம்பெறும் முக்கியமான சொற்றொடர்களை எடுத்துக்காட்டி விளக்குவதுடன், அவற்றோடு தொடர்புடைய சம்பவங்கள், உரையாடல்கள் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்த விரும்பும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடி விளக்குதல்.

**வினா இல.** 3

**3. குகப்படலத்தில்,**

(அ) பரதனின் துயரம்

(ஆ) சுமித்திரையதும் இலக்குவனதும் புகழ்

என்பன விவரிக்கப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,**

(அ) தருமன்

(ஆ) வீமன்

ஆகியோர் போர் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

## 3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

அ.

- பரதனின் கூற்றுக்களூடாகப் பரதனின் துயர நிலை காட்டப்படுதல்
  - இராமனை மகனாகப் பெற்றதால் கோசலை பெறவேண்டிய அரசுச் செல்வத்தை தான் பிறந்த – காரணத்தால் இழந்த பெருமைக்குரியவள் என பரதன் குற்றவுணர்ச்சியுடன் கூறுதல்.
  - கைகேயியின் பாழான தீவினையுடைய வயிற்றிலே நீண்ட நாட்கள் தங்கியிருத்தலால் உயிராகிய சுமை குறைந்து தேய்தல் எனல்.
- கவிக் கூற்றினுடாகப் பரதனின் துயரநிலை காட்டப்படல்
  - “தோன்றல் துயர்க் கடலினேக......”
- கோசலையின் கூற்றினுடாகப் பரதனின் துயர நிலை காட்டப்படுதல்.
  - “நைவீர் அலீர் மைந்தீர் இனித்துயரால்.......”
- இராமனுடன் சேர்ந்து செல்லும் பேறு பெற்ற இலக்குவனுடன் ஒப்பிட்டு, தன்னிலை குறித்து வருந்துதல்.
  - “இராமன் பின்பு பிறந்தானும் என்னப் பிரியாதான் .......”

(08 புள்ளிகள்)

**ஆ. சுமித்திரை :**

- அறமே வடிவெடுத்து வந்தவள் என்று சொல்லத்தக்கவள்.
- அன்பால் நிறைந்தவள்.
- சத்தியத்தை நிலைபெறச் செய்து இறந்த தசரதனின் இளைய பட்டத்தரசி.
- இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனைப் பெற்றறெடுத்த பெரியாள்.

**இலக்குவன் :**

- யாவராலும் தொழத்தக்க இராமனின் பின்பு பிறந்தவன்.
- "இராமனுக்குத் தம்பி" எனத் தெரியும் படியாக இராமனை என்றைக்கும் விட்டுப் பிரியாதவன்.

(07 புள்ளிகள்)

(08+07= 15 புள்ளிகள்)

**அல்லது**

**அ. தருமன் :**

போர் செய்வதில் உடன்பாடில்லை. போரினால் அழிவு ஏற்படுமாதலால் போரை விடச் சமாதானமே சிறந்தது; தவிர்க்க முடியாதவிடத்து போர் செய்யலாம் என்பதே அவரது கருத்தாகும்.

- பகையை வளர்த்துப் போர் செய்தால் துரியோதனன் ஆகியோரோடு நாமும் மடிந்து விடுவோம் எனல்.
- சான்றோரையும் உறவினர்களையும் தம்பியர்களையும் போர் செய்து அழித்துப் பெறுகின்ற ஆட்சியை வெறுத்தல்.
- சமாதானமாகச் சென்று குரு நாட்டின் பாகத்தைத் தரும் படி கேட்டு, துரியோதனன் தர மறுத்தால் ஐந்து ஊர்கள், ஐந்து இல்லங்கள் எனக் கேட்டு அதையும் தர மறுத்தால் பின் போர் புரிய உடன்படல் .
- நிலத்திற்காகப் போர் செய்வது இருவருக்கும் பழியை ஏற்படுத்தும் எனல்.
- பொருதொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே – போர், மன்னர்களால் இறுதியாகக் கையாளப்பட வேண்டிய உபாயம் எனல்.
- சமாதான வழியில் செல்வதற்கு வீமனையும் தூண்டுதல்.

(07 புள்ளிகள்)

**ஆ. வீமன் :**

தருமனுக்கு எதிரிடையான எண்ணமுள்ளவனாகக் காணப்படுகின்றான். போர் ஒன்றே தீர்வு என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவன்.

- கௌரவர் மீது கடுஞ் சினங் கொண்டு போரை விரும்பும் வீமனுக்கு, போரைத் தவிர்க்கும் தருமனின் மீது வெறுப்பும் கோபமும் ஏற்படல்.
  - மானம் இல்லாதவன் என தருமனை ஏசுதல்
- தருமனின் அருளுக்கு அஞ்சுவதாகக் கூறுதல்.
- போர் செய்து வெற்றிபெறுவது உறுதி எனல்.
- நாடு முழுவதையும் தருமன் ஆளும்படியாக துரியோதனனை வீர சுவர்க்கம் அனுப்புவேன் என வஞ்சினம் கூறுதல்.
- போர் செய்து நாட்டைப் பெறுவது உகந்தது என ஆவேசப்படல்.
- கொடிய துன்பங்களை அனுபவித்த பின்பும் சமாதானமாகத் தூது அனுப்பி நாட்டைப் பெறுவதை வெறுத்தல்.
- தூதாகச் சென்று துரியோதனன் ஆகியோரை அழிக்கத் துணியும் போர் வெறி காணப்படுதல்.
- தாம் கூறிய சபதங்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் நியாயத்தையும் வலியுறுத்துதல்.
  - மடப்பாவை தன் வரமும்
  - என் வரமும் வழுவா வண்ணம்

(08 புள்ளிகள்)

(07+08= 15 புள்ளிகள்)

## 3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**3 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




3 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் இதற்கு 95% ஆன பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,
00-03 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 24% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 09% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 9% ஆனோர் மாத்திரமே 12 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 42% ஆனோர் 3 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 24:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**3 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை**




**வரைபு 25:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

3 ஆம் வினா இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்தி விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதி தொடர்பாக, உபபிரிவு (அ) விற்கு 28% ஆனவர்களும் (ஆ) விற்கு 33% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். இரண்டாம் பகுதி தொடர்பாக, உப பிரிவு (அ) விற்கு 43% ஆனவர்களும் (ஆ) விற்கு 32% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- வினாவிற்குப் பொருத்தமான வகையில் மேற்கோளைக்காட்டி எழுதப்படவில்லை.
- விடைகளை நயந்து எழுதாமல் சிறுகுறிப்பாக எழுதியமை.
- பரீட்சார்த்திகள் வினாவுக்கேற்ற வகையில் விடையளிக்காது கதாப்பாத்திரங்களின் குணப்பண்புகளை விடைகளாக அளித்துள்ளமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- வினாக்களுக்கேற்ப இலக்கியப் பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- வினாக்களில் இடம்பெறும் விவரிக்கப்படுமாற்றை / சித்திரிக்கப்படுமாற்றை / வருணிக்கப்படுமாற்றை / அபிப்பிராய விளக்கம் போன்ற சொற்றொடர்ப் பிரயோகம் தொடர்பாக மாணவர்களுக்குக் கூடிய விளக்கமளித்தல்.
- பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்து, விடைகளைத் தொகுத்து எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- விடைகளைக் கருத்தூன்றி வாசித்து வினவப்பட்ட விடயத்தைக் கண்டறிவதற்குப் பயிற்றுவித்தல்.
- பாடப்பரப்பில் மேற்கோள்களுடன் எழுதப்படும் விடைகள் கூடிய மதிப்பெண்களைப் பெறும் என்பதை அறிவுறுத்தல்.
- மாணவர்கள் இலக்கியங்களை நயந்து கற்பதற்கு காணொளிகள் பல்வேறு இலக்கியங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி கற்றலை இரசனைக்குள்ளாக்குதல்.

**வினா இல.** 4

**4.** **இலக்கியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில், இலக்கியத்துக்கும் இலட்சியத்துக்குமிடையிலான தொடர்பை வலியுறுத்துவதற்கு ஆசிரியர்,

(அ) சிலப்பதிகாரம்

(ஆ) மகாபாரதம்

ஆகியவற்றைக் கையாண்ட முறையை விளக்குக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்,

3

(அ) காசீம்

(ஆ) மூத்த வாப்பா

ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளவாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

### 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

04. இலக்கியங்களில் இலட்சியங்களையும் இலட்சியவாதிகளையும் கண்டுணர முடிகின்றது. இலட்சியம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. அத்தோடு அவ் இலட்சியம் சமநோக்குடையதாகவும் இருத்தல் வேண்டும். இவற்றை இலக்கியங்கள் எமக்குப் போதிக்கின்றன. இவற்றின் மூலம் இலக்கிய இன்பமும் பெற முடியும்.

அ. சிலப்பதிகாரத்தில்,

சிலப்பதிகாரம் இலக்கிய பாத்திரங்களுக்கிடையேயான சமநோக்கை விபரிக்கிறது.

- கண்ணகி, பாண்டிமாதேவி ஆகியோர் இரு வேறு இலட்சியங்களைக் கொண்ட கதாமாந்தர்கள்.
- பாண்டியன் இறந்த பின்பு உயிர் துறந்தவள் அவன் மனைவி பாண்டிமாதேவி. கணவனை இழந்ததால் அவன்மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைப்பதற்காகத் தன் கோபத்தை வெளிப்படுத்தியவள் கண்ணகி.
- "இருவரில் யார் சிறந்தவர்" என்ற சேரன் செங்குட்டுவனின் வினாவிற்கு "அத்திறம் நிற்க" எனச் சேரமா தேவி கூறிய விடையில் இருமகளிரது இலட்சியங்களும் சிறந்தவை என்பது புலப்படல்.

(06 புள்ளிகள்)

ஆ. மகாபாரதத்தில்

மகாபாரதம் தனிமனித பாத்திரங்களின் இலட்சியங்களினூடாக சமநோக்கை வெளிப்படுத்துகின்றது .

- உயிரினும் இனியதாக இலட்சியம் உள்ளது என்பது, அர்ச்சுனன் மானத்தை உயிரைவிட மேலானதாக போற்றியுள்ளமையால் அறிய முடிகின்றது.
  - உயிரைத் துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபும் என அர்ச்சுனன் கூற்றாக இது வெளிப்படுகிறது.
- இலட்சியத்தின் பயனைத் தியாகம் செய்தவர்களையும் மகாபாரதம் குறிப்பிடுகிறது.
  - பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமநெறிச் செல்வரான தருமர், அறத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்ததோடு இலட்சியத்தின் பயனாக முத்தி உலகம் கிடைத்தும், புழுத்த நாய்க்கு உரிமையல்லாத முத்தி உலகம் தனக்கும் வேண்டாம் என மறுத்தார்.
- கர்ணன் கவச குண்டலங்களை இந்திரனுக்கு வழங்கியதன் மூலமும் அவனது இலட்சியத்தின் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது எனக் கூறுதல்.

(09புள்ளிகள்)

(06+09= 15 புள்ளிகள்)

**அல்லது**

அ.

காசிம்:

- கதை சொல்லியாக விளங்கும் முக்கியமான பாத்திரம்.
- மூத்தம்மா, மூத்தவாப்பா , தங்கை ஆகியோரிடத்தில் பாசம் கொண்டவன்.
- கிராமத்து பழைய நம்பிக்கைகளை அப்படியே நம்பும் சிறுபருவத்தவன்.
  - தனது தாயார் இறந்த போது பக்குல் கத்தவில்லை என்றும் அப்படி கத்தியிருந்தா உம்மாவை வீட்டுக்குள் சாகவிடாது காப்பாற்றி இருக்கலாமென்றும் நம்பியமை.
- இறந்து போன தாயாரின் நினைவினால் துயருறுபவன்.
- மூத்தம்மாவின் செயல்களை ஆச்சரியத்தோடும் அக்கறையோடும் கவனித்துப் பெருமை கொள்பவன் .
  - அவளது தோற்றத்தையும் நடத்தையையும் ஆளுமையையும் பார்த்து அவளை ஓர் அரசியாகக் கற்பனை செய்பவன்.
- அச்சப்படுபவனான காசிம் மூத்தம்மாவைப் போலவே தானும் துணிவுடன், இருக்கப் பழகியவன்.

(09 புள்ளிகள்)

ஆ.

மூத்தவாப்பா:

- மூத்தம்மாவின் கணவர்
- மூத்தவாப்பாவின் பழக்கவழக்கங்கள்
  - கூட்டுக் கரத்தையில் படுத்துறங்குதல்
  - கரத்தையில் விறகு பொறுக்க செல்லுதல்
  - சுருட்டு புகைத்தல், வெற்றிலை போடுதல்
- மூத்தம்மாமீது அன்பு கொண்டவர்
  - காசிம், "என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலப்போல ஓல கட்டினிங்க" என கேட்டதற்கு "மழ வெயில நனையாம அவவ கொண்டு போக வேண்டும்" என்று கூறியமை
- பேரப் பிள்ளைகளில் அன்பு கொண்டவர்
  - "காசிமை வாவெண்டா மனை" என தனக்கு அருகில் கூப்பிடுதல்
  - விறகு பொறுக்கச் செல்லும் போது காசிமை கூட்டிச் செல்லுதல்
- மூத்தம்மாவுடன் அன்னியோன்னியமாக வாழ்பவர்
  - மூத்தம்மா "அங்கபாரு மனெ உண்ட மூத்தவாப்பா தலைய "சூப்பின பனங்கொட்டை மாதிரி" என கிழவனை சீண்டி கொடுப்பினுள் சிரித்துக் கொள்வார் என்பதன் மூலம்
  - மூத்தம்மா இறந்த பின் காசிமை கூட்டிவர பாடசாலைக்குச் சென்ற மூத்தவாப்பா என்றும் இல்லாதவாறு தளர்ந்து போய் நிற்றல்.

(06புள்ளிகள்)

(09+06= 15 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

**4ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 96% ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப்புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00-03 வரையான புள்ளி வீச்சில் 34% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 28% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 8% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8% ஆனோரே 12 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 34% ஆனோர் 3 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 26** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**4 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை**




**வரைபு 27:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இரு பகுதிகளைக் கொண்ட நான்காம் வினாவில் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதற்பகுதி தொடர்பாக உப பிரிவு (அ) இற்கு 36% ஆன பரீட்சார்த்திகளும், உப பிரிவு (ஆ) இற்கு 24% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர். இவ் வினா இலக்கியப் புலமை நடை சார்ந்தமையால் இதற்குக் குறைந்த வீதத்தினரே சரியான விடையளித்துள்ளனர்.

இரண்டாம் பகுதி தொடர்பாக உப பிரிவு (அ) இற்கு 61% ஆன பரீட்சார்த்திகளும், உப பிரிவு (ஆ) இற்கு 41% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர். இவ் வினா இலகு வசன நடையாக அமைந்ததால் இவ்வினாவிற்கு திருப்திகரமாக விடையளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- "இலட்சியமும் சமநோக்கும்" என்ற கட்டுரையில், சிலப்பதிகாரம், மகாபாரதம் ஆகிய இலக்கியங்களுக்கும் இலட்சியத்துக்குமான தொடர்புபற்றிய வினாவிற்குப் பொருத்தமான இலக்கியங்களை அடையாளம் கண்டு சரியாக விடை அளிக்கத் தவறியுள்ளனர்.
- காசிம், மூத்தவாப்பா ஆகிய பாத்திரங்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்ற வினாவிற்கும் பாடப்பகுதியினை மேற்கோள்காட்டி பொருத்தமாக விடையெழுதுவதில் இடர்ப்பட்டுள்ளனர்.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பாடநூலிலுள்ள உரைநடை இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
- தாம் கற்றவற்றை ஞாபகப்படுத்தி விடையளிப்பதற்கு அலகுப் பரீட்சைகள் மூலம் பயிற்சி அளித்தல்.

**5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

**வினா இல 5**

**5. சீறி ஓடாத வருங்கால மனித நதி** என்ற கவிதையில்,

(அ) எழுத்தறிவின்மையின் அவலம்

(ஆ) எழுத்தறிவில்லா இளைஞன்மீது கவிஞர் கொண்ட பரிவு

என்பன புலப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

அ.

- பரிதாபத்தின் மொத்த வடிவமாகத் தோன்றுதல்
- கையொப்பங் கூட இட முடியாத நிலை; அதனால் ஏற்படும் வெட்கம்
- தனது உணர்வுகளை எழுத்தில் வெளிப்படுத்த முடியாமை
- எதிர்காலத்தில் எய்த வேண்டிய முன்னேற்றம் எதுவும் இல்லாமை.

(05 புள்ளிகள்)

ஆ.

- அவனின் பரிதாபத் தோற்றத்தைக் கண்டு இரங்கல்
- எழுத முடியாத அவனது நிலைமையைக் கண்டு வருந்துதல்
  - இதயம் கழன்று விழுந்ததாகக் கூறுதல்
  - தனது அலுவலகத்திற்கு அவன் வராமல் விட்டிருக்கலாம் என வருந்துதல்
- அழகு, இளமை எல்லாம் இருந்தும் வருங்காலமற்றவனாய் இருக்கும் அவனது நிலைக்கு வருந்துதல்
- தனது வழமையான வேலைகளைச் செய்ய முடியாத அளவிற்கு அவனைப்பற்றிய பரிதாப உணர்வு மேலெழல்.

(05புள்ளிகள்)
(05+05=10 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

**5 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




வரைபு 28 (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வினா தெரிவு வினாவாகும். இதனை 41% ஆன பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருந்தனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
இதில்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 37% ஆனவர்களும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 32% ஆனவர்களும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனவர்களும்
08 - 10 வரையான புள்ளி வீச்சில் 11% ஆனவர்களும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 11% ஆனவர்கள் 8 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 37% ஆனவர்கள் 2 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




**வரைபு 29:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினாவின் (அ), (ஆ) ஆகிய பிரிவுகளுக்கு முறையே 40%, 44% ஆன பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- கவிதையை ஆதாரமாகக் கொண்டு விடையெழுதாமல் பொதுவாக எழுதப்பட்டமை.
- எழுத்தறிவில்லா இளைஞன் மீது கவிஞர் கொண்ட பரிவிற்கு (சுட்டிப்பாக) கவிதைப் பொருளை உணர்ந்து விடையளிக்காமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- தரப்பட்ட வினாக்களுக்கேற்ப இலக்கியப் பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு நயந்து விடை எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- கவிஞரின் நோக்கம் என்ன என்பதைக் கவிதையினூடாக மாணவருக்குப் புரியும் வகையில் கவிதையை நுணுக்கமாகக் கற்பித்தல்.

**வினா இல. 6**

**6. தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையில்,

(அ) பக்தி

(ஆ) ஒழுக்கம்

என்பன எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

## 6 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**அ. பக்தி**

- தமிழ் பக்தியின் மொழி
  - தமிழில் உள்ள அளவு போல், வேறு எந்த மொழியிலும் பக்தி இலக்கியம் இல்லை
  - பரிபாடல் முதல் விபுலானந்தர் ஈறாகப் பக்தி பாடல்களைப் பாடிய புலவர்கள் ஏராளமானவர்கள்
- தமிழில் பக்தியை உணர்த்தவென உள்ள சொற்கள் பல
- பக்திப் பாடல்களை பாடி இன்புறாத தமிழ் மக்கள் இல்லை
- சங்ககால அகத்திணை இலக்கியம் பக்தி இலக்கியத்திற்குத் துணையாக அமைந்தமை.
- சமயப் பொருளற்ற பிற நூல்களுக்கும் பக்தி இலக்கியம் துணையாக அமைதல்
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், சேக்கிழார் , கம்பர் போன்றவர்களின் பக்திப் பண்பு உலகிலே நிகரற்றது.
- கோயில் கட்டிடம், சிற்பம், இசை, நாட்டியம் முதலான தமிழர்தம் பிற கலைகளும் பக்தியால் வளர்ச்சியுற்றவை
- தமிழரின் பக்தி கடல் கடந்த நாடுகளிலும் பரவியமை
- உலகம் போற்றும் நடராச வடிவம் தமிழரின் பக்தியின் பயனே.

(05 புள்ளிகள்)

**ஆ.ஒழுக்கம்**

- தமிழர் பண்பாட்டில் நீதி / ஒழுக்கம் முக்கியத்துவம் பெறுகின்றமை.
- திருக்குறளுக்கு இணையான நீதிநூல் உலகில் எங்கும் இல்லை என அல்பேட் சுவைட்சர் முதலான மேலைத்தேயத்தவர்களும் ஒத்துக்கொள்ளல்.
- தமிழில் ஈடுபட்ட மேனாட்டவர்கள் முதலில் தமிழ் நீதிநூல்களையே மொழிபெயர்த்தார்கள்.
- தமிழ் பெருந்தொகையான நீதிநூல்களைக் கொண்டது
- இம்மொழியை பேசும் மக்களுக்கு கடவுளின் அருள்,சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என போப்பையர் கூறுதல்
- தமிழ் மக்கள் வேறுவேறு நாடுகளில் வாழ்ந்து செழித்து ஓங்குவதற்கும் அவர்களது அரசியல் வாழ்க்கைக்கும் ஒழுக்கமே துணையாக அமைந்தமை

## 6 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




6 ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இதனை 10% ஆன பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருந்தனர். இவ் வினா புலமை நடை சார்ந்த வினாவாக அமைந்தமையால் குறைந்த வீதத்தினரே சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00-02 வரையான புள்ளி வீச்சில் 76% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 12% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 5% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 76% ஆனவர்கள் 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். 5% ஆனவர்களே 8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்

**வரைபு 30:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)




**வரைபு 31:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வினா இரண்டு பிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ), பிரிவுகளுக்கு முறையே 20%, 17% ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- வினா இலக்கம் 06 இல் "தமிழ்ப் பண்பாடு" என்ற கட்டுரையில் பக்தி, ஒழுக்கம் பற்றிய நேரடியான வினாவிற்குக் கட்டுரையின் ஆதாரமின்றி பொதுவாக விடையளித்தமை.
- பொருத்தமான உதாரணங்களும் வழங்கப்படவில்லை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- வினாவிற்கேற்ப கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்கப் பயிற்சி அளித்தல்.
- கட்டுரையில் ஆசிரியர் கூற்றாக வரும் விடயங்கள், ஆசிரியரின் நோக்கம் என்பவற்றைத் தெளிவாக விளக்குதல்.
- கட்டுரையில் வரும் முக்கியமான விடயங்களைக் குறித்துவைத்து அவற்றைத் தொகுத்து விடை அளிக்கப் பயிற்றுவித்தல்.

**வினா 7**

**7.** பாரதியாரது **சுயசரிதையினை** ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) எத்தகையோரால் தாம் விரும்பியவற்றை அடைய முடியாது ?

(ஆ) தாம் விரும்பியவற்றை அடைய முடியாத நிலையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வர் ?

(10 புள்ளிகள்)

**7 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

அ.

- தாழ்ந்தமனமுடையவர்கள்.
- சோம்பியிருப்பவர்கள்
- ஆடுபோல அங்கும் இங்கும் தாவித்தாவிப் பலபொருள் நாடுபவர்கள்
- தம்மையும் தம்மை வீழ்ச்சியடையச் செய்யும் இடையூறுகளுக்கு பயப்படுபவர்கள்
- தாம் விரும்பியவற்றைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்

(05 புள்ளிகள்)

ஆ.

- தமது தலைவிதியை நொந்து கொள்வார்கள்
- நண்பர்களைக் குறைகூறுவார்கள்
- கோபம் மிகுதியால் பகைவர்களை நிந்திப்பர்
- கபட வேலைகளில் ஈடுபடுவார்கள்
- பொய்யான சம்பிரதாயங்களை கூறுவார்கள்
- சாதகங்களை புரட்டிப் பார்ப்பர்
- பொய் கலந்த புத்தியினால் இழிவான நாத்திகம் பேசுவர்
- அழிவில்லாத நிறைவான விருப்பமே நன்மைகள் எல்லாவற்றையும் தரும் என்பதை உணரமாட்டார்கள்
- கண்ணில்லாதவர் போல் திகைப்பார்கள்

(05 புள்ளிகள்)

(05+05=10 புள்ளிகள்)

## 7 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:

**7 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




7 ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவை 44% ஆன மாணவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,
00-02 வரையான புள்ளி வீச்சில் 33% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 24% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 23% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 23% ஆனோர் 8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 33% ஆனவர்கள் 2 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**வரைபு 32:** (RD/16/03/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

**7 ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை**




**வரைபு 33:** (RD/16/04/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வினாவின் (அ) பிரிவுக்குரிய இலகுதன்மை 41% ஆகவும் (ஆ) பிரிவுக்குரிய இலகுதன்மை 49% ஆகவும் அமைந்துள்ளது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- கவிதைப் பரப்பை ஆதாரப்படுத்தி விடையளிக்கத் தவறியமை.
- மிக இலகுவான கவிதையாக இருந்தும் பொருத்தமான விடையை அளிக்கத் தவறியுள்ளனர்.
- கவிதையை ஞாபகப்படுத்தி எழுத முடியாமல் இடர்பட்டுள்ளமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- கவிதைப் பரப்பினை சந்திபிரித்து பொருள் விளங்க தெளிவாகக் கற்பித்தல்.
- அணிச்சிறப்புகளை விளக்குதல்.
- நடைமுறை வாழ்கையோடு இக் கவிதையைத் தொடர்புபடுத்தி தன்னம்பிக்கையூட்டும் அடிகளை எடுத்துக் கூறி விளக்குதல்.

## 2.3.5.3 வினாப்பத்திரம் III இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள்

★ இலக்கியத் தொகுப்பில் 12 செய்யுட் பகுதிகளும் 6 உரைநடைப் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. இங்கு செய்யுட் பகுதிகள் சந்திபிரித்து, கொண்டு கூட்டி, அரும்பத விளக்கங்களுடனும் அணிச் சிறப்புக்களுடனும் தெளிவாகவும் விளக்கமாகவும் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ இலக்கியப் பாடப் பகுதியில் இடம்பெறும் நூல்கள், நூலாசிரியர், எழுந்த காலப்பகுதி, நூல் கூறும் விடயம் போன்ற சுருக்கமான அறிமுகத்துடன் இலக்கியத்தைக் கற்பித்தல்.

★ உரைநடைப் பகுதியில் நாவலர் எழுந்தார், இலக்கியமும் சமநோக்கும், தமிழர் பண்பாடு என்பன இலக்கியம் சார்ந்த புலமை நடைகொண்டதாகும். கம்பியூட்டர், எது நல்ல சினிமா, மூத்தம்மா போன்றன இலகுவான மொழி நடை உடையனவாகும். புலமை நடை சார்ந்த இலக்கியங்களைக் கற்பிக்கும்போது இலக்கியநயத்துடன் கற்பித்தல்.

★ செய்யுட் பகுதியில் அநேக வினாக்கள் பரீட்சிக்கப்படுவதால் அப் பகுதிகளில் குறுவினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் போன்ற பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பொருத்தமான வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.

★ இலக்கிய பகுதிகளைக் கற்பிக்கும்போது ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- இலக்கியப் படைப்புகளை எழுதிய ஆசிரியர்
- அவர் வாழ்ந்த காலம்
- அவரது நோக்கம்
- இலக்கியங்களில் வரும் கதாபாத்திரங்களின் அம்சங்கள் / குணாதிசயங்கள்
- செய்யுள் நடை, உரைநடையின் தன்மைகள், சிறப்பம்சங்கள்
- மாணவர்களது அபிப்பிராயங்கள்

என்பனபற்றிக் கலந்துரையாடி தேவையான பயிற்சிகளையும் பின்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

★ வினாப்பத்திரத்தின் அறிவுறுத்தல்களை முழுமையாக வாசித்து கட்டாய வினாக்கள் எவை, தெரிவு வினாக்கள் எவை, அவற்றுக்கான நேர ஒதிக்கீடு என்பன தொடர்பாக தீர்மானங்களை மேற்கொண்டு விடையளிக்க வேண்டும்.

★ முதலாவது வினா சுருக்கமான விடை எழுதும் வினாவாகும். இதற்கு நீண்டதும் தேவையற்றதுமான விடைகள் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

★ விடையளிக்கும்போது உரைநடைப் பகுதிகள், செய்யுட்பகுதிகளில் இடம்பெறும் அருஞ்சொற்கள், மரபுத் தொடர்கள், அணிகள், இலக்கியப் படைப்பாளிகள், நூல்கள், கதாபாத்திரங்கள், குறிப்புப் பொருள்கள் என்பவற்றைச் சரியாகவும் நுணுக்கமாகவும் விளங்கி விடையளிக்கவேண்டும்.

★ இதிகாச இலக்கியங்களிலுள்ள செய்யுட் பகுதிகளை நன்றாக நயந்து விளங்கி விடையளிக்க பயிற்சி அளித்தல் வேண்டும். மேலும் நேரடியாகக் கேட்ட வினாவிற்கு மாத்திரமே விடையளித்தல் வேண்டும். தேவையற்ற விடயங்களைப் விளக்க வேண்டிய அவசியமில்லை.

★ கட்டுரைப் பகுதிக்கு அல்லது சிறுகதைப் பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு கேட்கப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாகவே விடை எழுத வேண்டும். முழுக் கதையையோ அல்லது முழுப் பகுதியையோ பொதுவாக எழுதுதல் கூடாது.

★ 5,6,7 ஆகிய தெரிவு வினாக்கள் மூன்றையும் வாசித்தறிந்து எந்த வினாவுக்குச் சிறப்பாக விடையளிக்க முடியும் என்பதை சரியாகத் தீர்மானித்து விடையளிக்க வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் சிறந்த புள்ளிகளைப் பெறமுடியாது போவதோடு நேரமும் வீணாகும்.

- ★ இலக்கியப் பரப்பிலுள்ள வினாக்களுக்கு கட்டமைப்பு முறையில் விடையளிப்பதற்கு மாணவர்கள் இடர்பட்டுள்ளனர். எனவே வினாக்களுக்குக் கட்டுரைப் பாங்கில் விடை எழுதும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அடைவுமட்டத்தை அதிகரிக்கலாம்.

- ★ விதிக்கப்பட்ட பாடப்பரப்புகள் தொடர்பாக சொற்பொழிவு, விவாதம், ஒப்படைகள் என்பவற்றை வழங்கி மாணவர்களை இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக மிளிரச் செய்யலாம்.

- ★ இலக்கியங்களை நயந்து, வெளிப்படுத்துவதற்கான களங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

- ★ வினாக்களினால் எதிர்பார்க்கப்படும் விடயங்களை தெளிவாக விளங்கி விடையளித்தல் வேண்டும். (தெளிவுறுத்துக, சித்திரிக்குக, விவரிக்குக, விளக்குக, ஆராய்க, எடுத்துக்காட்டுக, வலியுறுத்துக)

- ★ விடை எழுதும் பாங்கில் படைப்புத்திறன், புத்துருவாக்கம் என்பன வெளிப்படும் வகையிலான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும் (சொற்பொழிவு, நாடகம், விவாதம், கட்டுரைப் போட்டிகள், படைப்புத்திறன் ஒப்படைகள் போன்றன).

Printed by
Department of Examinations Press